[illegible]

மலர் 7 இதழ் 5

May 1934

SL
R673m2R1M28
M34.7.5
187095

1433

Registered No. M. 2330.

1433

" SIDDHANTHAM "
Vol. 7—No. 5.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

| மலர் எ | பவ ஆண்டு வைகாசித் திங்கள்<br>1934 ஆம் மேமீ | இதழ் ரு |
|---|---|---|

உள்ளுறை பக்கம்

அம்மையும் அப்பரும் ... ... கஉகூ
திருநீற்றின் சிறப்பு ... ... ... கநட-ச
ஐய வினா ... ... ... கநட-அ
அப்பரது கடவுட் கொள்கை ... ... கசு-அ
திருவிசைப்பா ... ... ... கசுசு
சேக்கிழார் காலம் ... ... ... கசுஎ
பிறவிக்கடல் நீத்த பிரான் ... ... ... கஞச
திருவாசகம் உரையுடன் ௩-அ௫-ச00
சித்தாந்த சாத்திரம் உரையுடன் ... கூ௫-அ0

ஆசிரியர் :—மு. பா[illegible]பிரமணிய முதலியார், B. A., B. L.
[illegible] ஆசிரியர் :—அ. கந்தசாமிப் பிள்ளை.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1934 தனிப் பிரதி அணா 4.

# திருமந்திரத்தைப் பற்றிய ஒரு குறிப்பு

[திரு. சோமசுந்தர தேசிகர்]

கயிலாயத்திலே வாழும் சித்தர் ஒருவர் மூலனாய் வந்து மொழிந்த பாடல் மூவாயிரமும் தமிழ் முதல் நூலா அன்றி மொழிபெயர்ப்பா என்னும் ஆசங்கையைக் கிளப்பி, அது தமிழ் முதல் நூலே என்று சைவ சித்தாந்த சமாஜ திருமந்திரப் பதிப்பில் கூறப்பட்டுளது (பக். xiii). காஞை அம்பலவாணத்தம்பிரான் இயற்றியருளிய பிராசாத அகவல் என்னும் யோக நூலின் உரையில் திருமந்திரம் வழிநூல் என்று கூறப்பட்டுளது. மேலும் சைவம் மூன்று பாகுபாடு பெறுமென்றும், அவை சித்தாந்த சைவமெனவும், தக்ஷிண சைவமெனவும், வாம சைவமெனவும் மூன்றுமெனவும், மூலதந்திராவதாராதி வாம சைவமெனவும், மூலதந்திராவதாரம் முதல் நூலெனவும், திருமந்திரம் வழிநூலெனவும் கூறப்பட்டுளது.

இனி இந்தத் திருமந்திரத்தின் பாடலெண் பெரிய புராணமாம் திருத்தொண்டர் புராணச் செய்யுளை யொட்டி மூவாயிரம் என்றும், திருமந்திரப் பதிப்புக்களின்படி மூவாயிரத்து நாற்பத்தாறும், மூவாயிரத்து ஐம்பத்தொன்றும் அச்சில் காண்கிறோம்.

இவைகளையன்றி பிராசாத அகவல் உரையில் ஒன்றும் தசாவஸ்தை என்ற நூலில் ஒன்றும் ஆகஇரண்டு புதியனவாகக் காணப்படுகின்றன. அவற்றைக் கீழே குறிக்கின்றேன்.

உடையவன் பாலித்த வொண்பொருள் மூன்று
மிடையொன்று மிரண்டு மியக்கறுங் காலம்
இடைநின்ற வாதார மேழு மழிய
இடைநின் றுளானங்கு மெய்நின்ற வாறே.

தன்னிலை யோரா துடலைமுன் றானென் றான்
தன்னிலை கண்டான் றுரியந்தலைக் கண்டான்
துன்னு துரியமு மீசனோ டொன்றாக்காற்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே.

---

[குறிப்பு:—திருமந்திரம் வழிநூல் என்ற கொள்கை பெரிதும் மறுக்கற்பால தொன்று.—பத்திராசிரியர்.]

Registered No. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

| மலர் எ | பவ ஆண்டு வைகாசித் திங்கள்<br>1934 ஆம் மே மீ | இதழ் ரு |
|---|---|---|

## அம்மையும் அப்பரும்

[அ. மு. பரமசிவானந்தம், அங்கம்பாக்கம்]

முன்னீர் தன் அலைகளால் அர்ச்சிக்கும் காரைக்காலில் வணிகர்குல தனதத்தனார் தவப்பயனாய்த் தோன்றிய புனிதவதியார் இளமையிலே இனிய விளையாடல்களை இயற்றி ஈன்றோரை அகமகிழச் செய்தனர். இளமைப் பருவம் நீங்கி எழின்மிகு மங்கைப் பருவமடைந்து உற்றாரும், மற்றோரும் உவந்து மணம் பேசவரும் வனப்புமிக்கிருந்தனர். தந்தையும் அவரைக் கடல் நாகையிலுள்ள நிதிபதி மைந்தனாம் பரமதத்தனுக்கு முந்தை மரபினுக் கேற்ற முறைமை மணம் புரிவித்தார். தங்கள் குடிக்கரும் புதல்வியாதலினால் தனதத்தன் அவர்களைக் கடல் நாகைக் ககற்றாமல் தம் காரைக்காலிலேயே இருத்தி, இல்லறம் இனிதுற அமைத்துத் தாம் தம் பத்தினியாருடன் சின்னாள் சென்று சிவனார் திருவடிக்கீழ் எய்தினார்.

பரமதத்தனும் புனிதவதியாரும் இல்லறமே துறவறத்தினும் ஏற்றமெனும் நன்மொழியைப் பல்லுலகும் பலவுயிரும்

பயின்றுணர்ந்து விடுமாறு அதை இனிமையுற நடத்தி வந்தனர். 'சிவனடியார்க் கன்பில்லாச் சிந்தையே இரும்பு' என்ற இன்கருத்தை இதயத்தமைத்து, அண்டர் பிரான் தொண்டரடி அன்புடனே போற்றி அன்னார்க்கு அமுதளித்து வாணாளை நன்னாளாக்கி வந்தனர். இவ்வாறு சிவனடியாரடி சிரமேற் கொண்டு போற்றி வரும் நாளில், ஓர் பகல் பரமதத்தனுக்கென இரு மாங்கனிகள் அம்மையாரிடம் அளிக்கப்பட்டன. அன்றே ஆண்டவன் அடித்தொண்டர் ஒருவர் அவரில்லத்தமுதருந்த, அக்கனிகளுள் ஒன்றை அவருக் களித்தனர். பிறகு தம் கணவனார் இல்புகுந்து இன்னடிசில் உண்ணுங்கால் கனிகளை வேண்ட, அம்மையார் ஒரு கனி அளித்தார். அதை உண்ட வணிகரும் மறுகனியை வேண்ட அம்மையார் ஒன்றுங் கூறாது உட்புகுந்தார். புகுந்த பிறகு.

"அம்மருங்கு நின்றயர்வார் அருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே அவரருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று"

கனியினைக் கண்ட கார்குழலார் கழிபேருவகை யெய்தி, காணற்கரிய கறைக் கண்டனைக் கருத்துட் போற்றி, கணவனாற்கு அக்கனியை அளித்தார். பரமதத்தனும் அஃதருந்தி அதன் சுவை அமுதினும் மிக்கிருத்தல் அறிந்து, அதுவந்த விதத்தை வினவினவுடன் புனிதவதியாரும் உண்மையைப் புகன்றார். வணிகனும், கனி வானவர்கோன் அருளால் வந்ததெனக் கேட்டு உண்மை அறிய மற்றோர் கனிவேட்டான். இறையவனும் ஒருகனி உதவ அதுவணிகர்கையிற் பொருந்தி மறைந்தது. உடனே பரமதத்தன் மனைவியை மனைவியாகக் கருதாது, மாபெருந் தெய்வமாக மனதிற் கொண்டு, அன்னாரை அகன்று, கடன்மேற் கலஞ் செலுத்தி பாண்டி நாட்டுள்ள ஒரு பட்டினத்தை அடுத்து, ஆண்டோர் ஆரணங்கை வதுவை செய்து, இனிது இல்லறம் நடத்திப் பெண்மகவொன்றீன்றாள். புனிதவதியார் மீது பொங்கிய பக்தியால் அப் பெண்மகவிற்கு அப்பெயரே இட்டழைத்தான்.

187



ஈண்டு இவ்வாறாக, காரைக்காலில் அமர்ந்த நம் அம்மையாரின் கிளைஞர்கள் பரமதத்தன் பாண்டிய நாட்டோர் மருங்கே பயின்று வருகின்றான் எனக் கேட்டு, அவ்விடத்தினின்றும் அம்மையாரை உடன் அழைத்துக் கொண்டு பரமதத்தனிடம் விடுவதற்கென அவன் இருக்குமிடம் விரைந்து சேர்ந்தனர். அஃதறிந்த அவ்வணிகன் தம் மனைவியும் மகவும் பின்தொடர வந்து புனிதவதியாரின் புனித பாதம் பணிந்து நின்றான். அம்மையும் அதற்கஞ்சி ஒதுங்க, உற்றாரும் அவ்வணக்கத்திற்குக் காரணம் யாதென வணிகனை வினாவினார். அவன் புனிதவதியாரைத் தெய்வ உருவென்று போற்றி நின்றான். அது கண்ட அம்மையார்,

"ஈங்கிவன் குறித்த கொள்கை இதுஇனி இவனுக்காகத்
தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்கு நின்றார்கள் போற்றும் பேய்வடி வடியேனுக்குப்
பாங்குற வேண்டு மென்று பரமனைப் பரவி நின்றார்"

உடனே மன்றுளாடும் மாணிக்கச் சோதி வேண்டுவார் வேண்டியவற்றை அளிக்கும் வித்தகன் என்பதை விண்ணவரும் மண்ணவரும் அறியும்படி, மலர்மழை யெங்கும் பொழியவும், வானதுந்துபியின் நாதம் உலகெலாம் நிறைந்து விம்மவும், உம்பரும் முனிவருங் குலவவும், கணங்களெல்லாம் களிப்பு மீக் கூரவும், முன்னின்ற சுற்றத்தார் தொழுது நிற்கவும் யாவரும் போற்றும் பேய்வடிவை அருளினார். உடனே அம்மையார் தாம் கொண்ட வடிவு கண்டு வள்ளலாம் வானவர் கோனை வாழ்த்தி,

'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பதிடர்'

என்று தாம் அனுபவித்த விதத்தையே முதற் செய்யுளாக அமைத்து அற்புதத் திருவந்தாதியைப் பாடிமுடித்தார். பிறகு அம்மையார் உலகெலாம் ஈன்ற உத்தமரைக் காணச்

187085

செல்ல ஆசைமீக் கூர்ந்து கைலையை நாடிச் சென்றார். வடதிசைத்தேய மெல்லாம் மனதினுங் கடிதாய்ச் சென்று கங்காதரன் அமர்ந்துறையும் கைலைமலையை அடைந்தார். ஈசனார் அமர்ந்துறையும் அம்மலையின் மீது தம் பாதங்கள் படின் பாவம் வந்து பற்றும் எனக் கருதித் தலையைக் கீழே ஊன்றி அத்தலையினாலே நடந்து மலைமீதேறினார். இவ்வாறு செல்வதைக் கைலையிலிருந்து கண்ணுற்ற உமையம்மையார்,

"தம்பெரு மானைநோக்கித் தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மானோ ரெற்பின் யாக்கையன் பென்னே"

என்று வினவினார். அதைச்செவிமடுத்த ஐயர் உமையை நோக்கி "வருகின்ற பேய் நம்மைப் பேணும் அம்மையாகும்; அவள் இவ்வடிவத்தை தானே விரும்பிப் பெற்றாள்" எனக் கூறிப் பிறகும் அப்பேய்வடிவை நேக்கி **அம்மையே** என்றார். உடனே அப்பேய்வடிவைப் பெற்ற பெற்றிமையார் அப்பா என்று ஆண்டவனாது தாண்டவப்பாதத்தைப்பணிந்து நின்றார். அப்பரும் அம்மையை நோக்கி 'வேண்டுவது யாதென வினவினார். இதையன்றோ சேக்கிழாரும்,

"வருமவள் நம்மைப் பேணும் அம்மைகா ணுமையே மற்றுப்
பெருமைசேர் வடிவு வேண்டிப் பெற்றனள் என்று பிற்றை
யருகுவந் தணைய நோக்கி **அம்மையே** யென்னுஞ் செம்மை
யொருமொழி யுலக மெல்லாம் உய்யவே அருளிச் செய்தார்"

"அங்கணன் அம்மையேயென் றருள்செய **அப்பா** வென்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னானும் தம்மைநேர் நோக்கி நம்பால்
இங்குவேண் டுவதென் னென்ன இறைஞ்சிநின் றியம்பு கின்றார்"

எனச் செம்மைசான்ற மொழிகளால் செப்பிப் போந்தார்.

அவ்வாறு அப்பர் நீ வேண்டுவது யாதென வினவவும் அம்மையும் மனமுவந்து வேண்டலாயினர். என்னே அவர் பெற்றிமை! அவர் வேண்டியவை யாவை ?



"இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க...".

என்று வேண்டினார். உடனே வெள்ளிமால் வரையின் உச்சி வீற்றிருந்தருளும் முக்கண் வள்ளலார் அம்மை வேண்டியவாறே அளித்து, திருஆலங் காட்டிலே தம் திருஆடலைக் காணுமாறு அருளினார். அம்மையும் அவ்வாறே தலையால் நடந்து தொண்டர்கள் மலியும் தொண்டைநன்னாட்டில் அண்டர்கள் போற்றும் ஆலங்காடெனும் அரும்பதி அடைந்தனர். அவ்வாறே பன்னெடுநாள் பண்ணவனடியைக் கண்டு பரமானந்தப் பெரும் பேறெய்தித் திருப்பதிகங்கள் பாடிச் சின்னாட் சென்று அம்மையே என்றழைத்த ஆண்டவனாது தாண்டவபதத்தை என்றும் நீங்காதிருக்கும் இன்பம் எய்தினார்.

இவ்வாறு இரண்டறக்கலந்த எம் அன்னையின் பெருமை என்னே! இவ்வம்மையாரையன்றோ அன்றும், இன்றும், என்றும் காரைக்காற் பேய் என்று காருலகம் புகழ்கின்றது. இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கே எய்துமாறு தலையில் நடந்து தலையாய அன்பைக் காட்டி நமக்கு விளக்கிய தாயின் பக்தி என்னே! இப்பேய்கண்ட பெருநடனம் பேருலகில் வேறார் கண்டார்! இவரையன்றோ ஆண்டவனும் அம்மையே என்றழைத்தார். இவரும் அப்பா என்று அழலேந்தும் அழகரை அழைத்தார். இவ்வம்மையார் இவ்வுலகில், மூவுலகும் உய்யக் காத்த உத்தமனார் தம் அன்பர் பொருட்டு எதையும் அருளுவன் என்பதைத் தம் பேய்வடிவினாற் புலப்படுத்தினார். அம்மையார் அமர்ந்த ஆலங்காட்டிலன்றோ அருந்தமிழ்ப் பெரியாராம் காழிப்பிள்ளையார் 'அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே' என்று அஞ்சிப் பாடினார். அத்தகைய பெரும்பேறெய்திய காரைக்கால் அம்மையாரின்பெருமை பேசற்பாற்றோ! அப்பா என்று ஆண்டவரை இவர் அழைப்பதன்முன் இவரை அம்மையே என்று

ஆண்டவன் அழைத்தார் என்றால் இதைவிட வேறு பேறு யாதுளது. இதன் பெருமை குறித்தன்றோ பதினோராந்திரு முறையினும் முதலிலுள்ள மதிமலி புரிசை யென்னும் அப்பருடைய அருஞ்செய்யுளுக்கு இரண்டாவதாக அம்மையாருடைய அருஞ்செய்யுட்கள் அமைக்கப் பட்டுள்ளன. அன்னார் பெற்றியை இந்நாடும், எந்நாடும் உணர்ந்து உவப்புறுக.

# திருநீற்றின் சிறப்பு

[S. A. அமிர்தகடேசுவர பிள்ளை, வேளாங்கண்ணி].

(மலர் எ. இதழ் ௪, ௧௨௩-ம் பக்கத் தொடர்ச்சி)

அசைவ விபூதி :— இதனை அகற்பம் என்றும் கூறுவர். தை அல்லது மாசித் திங்களில் நெற்றாள் மேய்ந்து வரும் பசுக்களின் சாணத்தை எடுத்து வந்து பஞ்சகவ்வியம் வார்த்துப் பிசைந்து உருண்டைகள் செய்து மாசிமாத அமரபக்கம் சதுர்த்தசி திதியிலேனும் வேறு திருநாட்களிலேனும் நெற்பதரோடு சேர்த்து அங்கியிட்டுத் தகித்துச் சூடாறிய பின்னர் எடுத்துப் புதுப் பாண்டத்திற் புகுத்தேனும் சுரைக் குடுக்கைக்குட் புகுத்தேனுங் கொள்வதும் சிவாலய மடைப் பள்ளிகளில் விளைவதுமாம்.

மேலறைந்த அசைவ விபூதியில் தானாக அடவியிற் கிடக்கும் திருநீறு சங்கர சாதியர்கட்குரியது என்பர்.

விபூதி ஆன்மாக்கட்கு ஐசுவரியத்தைப் பயத்தலால் ‘விபூதி’ எனவும்; சிவத்துவத்தை விளக்கலால் ‘பசிதம்’ எனவும்; ஆன்மாக்களின் பாசங்களாம், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களை அறவே கழுவுதலால் ‘காரம்’ எனவும்; பேய் பிணி முதலியவற்றால் வரும் இன்னலைக் களைவதால் ‘இரக்கை’ அல்லது ‘காப்பு’ எனவும்; சகல பாவங்களையுந் தகித்தலால் ‘திருநீறு’ எனவும் பெயர் பெறும். இதுபற்றியே:

“தொகுத்த வாழ்க்கையாற் ‘பூதியுஞ்’ சோதி மேற்றலால்
பகுத்த நூல்புகல் பசிதமும் படுமலம் பிணிமா
சுகுத்த லாலுயர் காரமும் காத்தலாற் ‘காப்பு’
மிகுத்த தீதுநீற் றிடுதலால் நீறும்பேர் விளம்பும்.”

என்றது உண்மையே.

விபூதியைப் பன்னிரண்டு விரல் நீளமும் எட்டு விரல் அகலமுமுடையதாயுள்ள மான்தோல், புலித்தோல், பட்டு முதலியவற்றால் தைக்கப்பட்ட பைகளிலேனும், சம்புடத்திலேனும், வில்வக் குடுக்கையிலேனும் எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும். குடுக்கைகளின்றிப் பிறவற்றிலுள்ள விபூதியைக் கவிழ்க்கலாகா.

விபூதிப் பையை விபூதிக் கோயில் என்றும்; விபூதியைச் ‘சதாசிவம்’ என்றும்; விபூதிக் கோயிலை ‘உமாதேவி’ என்றும்; விபூதிக் கோயிலை தைத்துள்ள நூலைப் பிரமதேவனென்றும்; அன்னதைப் பிணிக்கும் கயிற்றைத் ‘திருமால்’ என்றுங் கூறினும் அமையும். இவ்வாறே வேதாகமங்களும் முறையிடுகின்றன. இதனை:

“பூதியாலயஞ் சத்தி யன்னதிற் புனைதருநூ
லாதி நான்முகன் பந்திக்கு கயிறு மாலதனுட்
டூதீர்தா உறை வெண்ணீ றருட்சதா சிவமாம்
....................................”

என வருஞ் செய்யுளானு முணரலாகும்.

கரிய நிற விபூதி கொடிய ரோகத்தைக் கொடுக்கும்; சிவந்த நிற விபூதி கீர்த்தியைப் போக்கும்; புகை நிற விபூதி ஆயுளைக் குறைக்கும்; பொன்னிற விபூதி வறுமையைத் தரும் ஆதலின் வெள்ளிய நீற்றை யணிவதே பூதியணிவோர் கடனாம். ஏனெனில் ‘நீற்றில் வெண்மையுள தத்தனையு முத்தி’ வெண்மை நீறு எண்ணிலாப் புண்ணிய முதவும் என்பது காண்க. இவ்வெண்ணீற்றினின்று சித்த சுத்தியும், அச்சித்த

சுத்தியினின்று ஞானப் பிரகாசமும்; அவ்வரிய ஞானப் பிரகாசத்தினின்று ஆன்மா முத்தியடைவதும் சத்தியம்.

திருநீற்றை எவ்வெப்போது நாம் தரித்தல் வேண்டும்?

"காலையிலெழும் போது மலசலம் விடுத்துமிகு
கால்சுத்தி செய்த போதும்
காரிகையுடன் கூடி நீராடினுந் தாணி
காவல ரிடமேகினும்
மாலையம் போதினும் சண்டாளர் நிழல்படினு
மறுகூடு சென்று வரினும்
மாதரூ தகமேறு மங்கையர்கள் நிழல்படினும்
மாபெரியா ரிடமேவினும்
பால்பழம் போசனங் கொண்டபினும் நறுமலர்
பறித்திடினு மாபாதகர்
பார்த்திடினும் எவ்வழி பயப்படினும் நன்னூற்
படித்திடினும் ஔஷத முணினும்
ஆலயம் புகினும் விபூதியிடல் முறையென்பர்
அருள் பெறுவசந்த ராயர்
அண்ணாவி னிற்றுதிசெய் யுண்ணாமு லைக்குரிய
அண்ணா மலைத்தேவனே"

என இயம்பியவாறு திருநீற்றை எக்காலங்களிலுந் தரித்தல் வேண்டும். 'நீறில்லா நெற்றி பாழ்' என்பதூஉம் இவண் கவனிக்கத் தக்கது.

இனி திருநீறு தரிக்கும் முறையினைச் சொல்லுவாம்:

பத்தியொடு "சிவசிவா" வென்று திருநீற்றைப்
பரிந்துகை யாலெடுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதிலொழுக
நித்தமூவிரல்களால் நெற்றியி லழுந்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினையணுகாது தேகபரி சுத்தமாம்
நீங்காமல் அமலனங்கே
சத்தியொடு நித்தவிளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந்திரு
சஞ்சலம் வாராதுபர கதியுதவு மிவரையே
சத்தியுஞ் சிவனென்னலாம்



மத்தினிய மேருவென வைத்தவமு தினைக்கடையு
மால்மருக னை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு
மலை மேவு குமரேசனே.

எனக் குருபாததாச சுவாமிகள் மொழிகின்றனர். விபூதி தரிப்பதில் உத்தூளனம், திரிபுண்டரம் என இரு வகைப்படும். இப்பெரியார் இயம்புவது உத்தூளனம். கிழக்குமுகமாக வேனும், வடக்குமுகமாகவேனும் நின்றுயினு மிருந்தாயினும் (மனம் மொழி மெய்) பரிசுத்தத்தோடும் சிவநாமங்களைப்புகன்று திருநீற்றை அதிபத்தியுடன் வலக்கைப் பெருவிரலோடு கூடிய மற்ற மூவிரல்களாலும் பூமியின்மீது வீழா வண்ணம் எடுத்து அண்ணாந்து 'துதிகொள் நுதலில் காதுக்குத் தொடுதலேபோதும்' எனக் கூறியவாறு செவியொடு செவிவரை தோள் மீது ஒழுகுமாறு நெற்றியிலழுந்த ஏகமாய்,

"உச்சியே நெற்றி கண்ட முடம் பரைகைகால் பின்ன
மெச்சி வெண்ணீறு மூன்று விரல்படச் சாத்தினிது
நச்செரி நயனமாலம் ஈசரியர் புலித்தோனவ்வி
இச்சையாம் பரசு யானைத் தோலுமாங் கெய்து மன்றே"

எனும் மேலையோர் மொழியினை மதித்து, உச்சி, நெற்றி, கழுத்து, உடம்பு, அரை, கைகள், கால்கள் ஆகிய உறுப்புக்களில் வெற்றிதரு நீற்றை உத்தூளனமாகத் தரித்தால் அவ்வவ் வுறுப்புக்களில், விரும்பத்தக்க அக்கினிக் கண்ணும், ஒருபாகத்தில் வரையின் சுதையும், கலைமானும் புலித்தோலும், மூளைமதியும், மழுவும் கரித்தோலுமுடைய சிவ சொரூபம் எய்தும். ஆகவே நனியன்புடன் முற்கூறியவிதம் திருநீற்றைத் தரிப்பவர்கள் மிகு செல்வராவதுந்தவிர இகத்தில் விழுமியோர் விழைவும் அன்னதால் பரமன் பாதத்தில் பதிவதுந் திண்ணம். மேலும் இவ்விதந் தரிப்போர்க்கு முற்பிறப்பிற் செய்த தீவினைகள் உருவைவிட்டகலாநிழலே போன்று தொடர்ந்திருப்பினும் யாவற்றையும் நீக்கி ஆட்கொள்வன் நம்சிவபிரான்.

May-1934

# ஐயவினா

(ஆ. சண்முகம் பிள்ளை)

(1) திருநாவுக்கரசு சுவாமிகள் திருவங்கமாலை தேவாரப் பதிகத்தில் 'தலைமாலைதலைக்கணிந்து' என்ற சொற்றொடருக்கும், 'மூக்கே நீ முரலாய்' என்ற சொற்றொடருக்கும் உரையாது?

(2) வைராக்கிய சதகஉரையாசிரியர் உதாரணச் செய்யுளாக முதலேழு திருமுறையை எடுத்தாளும்போது ஆளுடைய பிள்ளையார் பதிகத்தை, 'திருக்கடைக் காப்பு' என்ற தலைப்பின் கீழும் ஆளுடைய அரசின்பதிகத்தைத் 'தேவாரம்' என்ற தலைப்பின் கீழும், ஆளுடைய நம்பிகள் பதிகத்தை, 'திருப்பாட்'டென்ற தலைப்பின் கீழும் எடுத்தாள வேண்டியதற் காதரமென்ன?

# அப்பரது கடவுட் கொள்கை

[பெ. கோவிந்த மூப்பனார், கொடுமுடி]

(மலர் - எ, இதழ் - ச, கஉஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

திருநாவுக்கரசு நாயனார் ஆரியர்கள் வலையில் அகப்பட்டார்களுள் ஒருவராயினும், அவர்கள் கொள்கை அனைத்தையும் ஏற்றவரல்லர்; ஆரியர் வலையில் அகப்படாத தெய்வப் புலவர் திருவள்ளுவரை எல்லா வகையிலும் ஒத்தவராகவே காணப்படுகிறார். புராணக் கதைகளைச் சிவபெருமானுக்கு நீக்கி விட்டால் திருநாவுக்கரசு நாயனார் கூறும் கடவுளும் திருவள்ளுவர் கூறும் கடவுளும் ஒன்று என்றும், கடவுளை அடைவதற்கு இருவர் கூறும் கொள்கைகளும் முற்றும் ஒற்றுமையுடையன என்றும் இருவர் நூல்களையும் கற்றவர்கள் அறிவார்கள். ஆரியர்கள் தங்களுக்குதவி செய்த செத்துச் செத்துப் பிறந்த அரசர்களையும் வீரர்களையும் நில முதலிய அஃறிணைப் பொருள்களையும் கடவுளெனக்கொண்டு



வழிபடும் பல தெய்வ வழிபாட்டையும், அத் தெய்வங்களுக்குச் செய்யும் வேள்விகளையும், தந்நலங்கருதி ஏற்படுத்திக் கொண்ட வகுப்பு வேற்றுமையையும், இரத்தல் தொழிலையும், நீராடின மட்டில் உயர்வென்று நடித்தலையும் முறையே,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்றும்,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயர்செகுத் துண்ணாமை நன்று"

என்றும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்றும்,

"இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டதில்"

என்றும்,

"மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்."

என்றும் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் மறுத்துக் கூறுவது போலவே,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்த னென்றரி யோடு பிரமனும்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே"

"வேத மோதிலென் வேள்விகள் வேட்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி அங்கமோ ராறும் உணரிலென்
ஈசனை யுள்குவார்க் கன்றி இல்லையே"

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமும்குல மும்கொண்டென் செய்வீர்
பாத்தி ரம்சிவ னென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும்மாற் பேறரே"

"இரப்பதே ஈயமாட்டேன் என்செய்வான்
தோன்றினேன் ஏழையேனே"

"கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடினாலும் அரனுக் கன்பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே."

என்று கூறி நமது நாயனார் மறுத்தலையும், ஒரு கடவுள், வகுப்பு வேற்றுமையின்மை, கொடை, அன்பு, வழிபாடு என்பனவற்றை வலியுறுத்துதலையும் காண்க. அன்றியும், சம்பந்தர்,

"மந்திபோற்றிரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப்
பயனறிகிலா அந்தகர்."

என்று சமணர்களை இகழ்ந்து கூற,

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்."

என்பன போன்ற தொடர்களால் இருபிரிவார் கொள்கையையும் உடன்பட்ட நாவுக்கரசரே,

"வாயிருந் தமிழே படித் தாளுறு
ஆயிரஞ் சமணும் அழிவாக்கினான்"

என்று ஆரியத்தை விடுத்துத் தமிழை மட்டும் கூறி அதனைக் கல்லாச் சமணர்களை இகழ்ந்து, தமிழுக்குப் பெருமை கொடுத்தலையும்,

"பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தைமயக்கறுத்த திருவருளினானை"

என்று தமிழ் மாலை பாடும் பேறு தமக்குக் கிடைத்ததாகக் கூறித் தமிழுக்குப் பெருமை கொடுத்தலையும் நோக்கினால் தமது தாய்மொழியிடத்தில் பற்றுள்ளவர் என்று அறியலாம்.

புறத் தொண்டும் அகத் தொண்டும், புறவொழுக்கமும் அகவொழுக்கமும் தம்முள் ஒத்த சிறப்புடையன அல்ல. புறத்தொண்டினும் அகத் தொண்டு பன்மடங்கு சிறப்புடை-



யது. புறத்தொண்டு அகத்தொண்டிற்குக் கருவி. மனத்திற்குக் கண் கால் முதலியன கருவியாதல் போல மனத்தினால் செய்யப்படும் தொண்டிற்குக் கண் கால் முதலியவற்றால் செய்யப்படுந் தொண்டு கருவியாகிறது. நூலினைக் கற்குங் கால், கண்கள் காண, மனம் அவற்றோடு கலந்து நூலின் கருத்தினைத் தெரிந்து கொள்ளுகிறது. கண்கள் பயிற்சி வழக்கத்தால் நூலினைப் பார்த்துக் கொண்டிருப்பினும் மனம் கண்ணோடு கலக்காதாயின், அவை பார்த்துக்கொண்டிருந்ததனால் பயனின்றாம். அதுபோலவே புறக்கருவியாற் செய்யப்படும் புறத்தொண்டும், மனம் அக்கருவிகளோடு கலந்து செய்த வழியே பயனுண்டு; இன்றேல் இன்றாம். அன்றியும் கண்களால் நூலினைப் பார்த்துப் பார்த்துப் படித்தறிவதனினும் படித்த கருத்தினைக் கண்களை விடுத்து மனத்தினால் மட்டும் எண்ணித் தெளிதல் பன்மடங்கு சிறப்பாதல்போல, புறக் கருவியால் செய்யப்படும் புறத்தொண்டை விடுத்து, மனத்தால் செய்யப்படும் அகத்தொண்டைச் செய்தல் பன்மடங்கு சிறப்புடையதாம். புறவொழுக்கத்தினும் அகவொழுக்கம் சிறப்புடையது என்பதற்கும் இக்காரணங்களைக் கொள்க.

புறத் தொண்டின் முதிர்ச்சியினாலேயே அகத்தொண்டு ஏற்படும். அகத்தொண்டு செய்வதற்குப் புறக் கருவியின் தொழிலைத் தடுக்க வேண்டும். தொழில் முதிர்ச்சி யடைந்த கருவிகளைத் தொழில் செய்யாமல் தடுப்பது அருமையான செயல். கருவிகளின் வழியாகவே தொழில் செய்து வந்த மனத்தைக் கருவிகளின்றித் தனித்துத் தொழில் செய்யுமாறு முயற்சித்தலும் அருமையான செயல்.

"உள்ளமோ ஒன்றில் நில்லாது"

என்றும்,

"புள்ளுவர் ஐவர் கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளைய ஒட்டார்"

என்றும் நாயனார் கூறுதல் காண்க. ஒருவழிப்படாத உள்ளத்தை ஒருவழிப்படுத்துதற்குப் புறக்கருவிகள் செய்யும் கடவுள் தொண்டுகளை உள்ளம் செய்யுமாறு வேலை கொடுத்து,

உடம்பைக் கோயிலாகவும், அதனுள் இருக்கும் உயிரை இலிங்கமாகவும் அன்பைப் பால்முதலியனவாகவும் எண்ணிப் புறவழிபாட்டைப் போலவே அகவழிபாடு செய்கிறார். அக வழிபாட்டினை ஏற்று இறைவன் அடிகளுக்கு அவரது மனத்திலிருந்து காட்சியளிக்கிறான்.

"விள்ளத்தா னென்று மாட்டேன் விருப்பெனும் வேட்கையாலே
வள்ளத்தேன் போல நுன்னை வாய்மடுத் துண்டிடாமே
உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும்
கள்ளத்தே நிற்றி யம்மா எங்ஙனம் காணுமாறே."

"விடையான் விரும்பிஎன் னுள்ளத் திருந்தான்"

"என்மனமே ஒன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே"

என்பன போன்று அடிகள் பல விடங்களிற் கூறுதல் காண்க.

ஐம்பொறிகளையும் மனத்தையும் அடக்கி, மனத்துள் இறைவனைக் கண்டாராயினும், மனம் கருவிகளுள் ஒன்றாகலின், கருவிகளை எல்லாம் கடந்து நிற்கும் கடவுள் அம்மனத்தினால் காணப்படும்பொழுது "கள்ளத்தே நிற்றி" என்று அடிகள் கூறுவது போலக் கள்ளத்தோடு காணப்படுதலின், அவ்வடிவத்தைக் கண்டமட்டில் அமைதிகொள்ளாது அக்கடவுளது உண்மை இயல்பை உணர எண்ணி மனக் கருவியால் நோக்காது மெய்யறிவால் நோக்கி உண்மை இயல்பை உணர்ந்து கொள்ளுகிறார்.

"உடம்பெனு மனையகத்து உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே"

"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்போக்கித்
தெள்ளியே னாகிநின்று தேடினேன் நாடிக் கண்டேன்"

"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்"

என்று அடிகள் கூறுவனவற்றால் அறியலாம்.



மேற்கூறியவற்றால் திருநாவுக்கரசு நாயனார், கடவுள் உண்டு என்றும்; அக்கடவுள், வடிவிற் குட்படுதலும், பிறவிக் குட்படுதலும், காலத்திற் குட்படுதலும், காட்சிக் குட்படுதலுமில்லாத சிவபெருமான் என்றும்; அச்சிவபெருமானுக்கு ஆரியர்கள் கூறும் மனைவி மக்கள் முதலியோர்களும், வடிவம் நிறம் முதலியனவும் உண்மையில் இல்லை என்றும்; அச்சிவபெருமான் சிறியதிற் சிறிதாயும் பெரியதிற் பெரியதாயும் எங்கும் நிறைந்திருக்கிறான் என்றும்; ஏனைச் சமயக் கடவுளர்கள் இறந்துபட்டமையின், அவர்களைக் கடவுளர்களாகக் கொண்டு வழிபடும் அடியார்களுக்கும் சிவபெருமானே அருள் புரிகிறான் என்றும்; உலகம், உடல் உறுப்பு, உடைமைகளை உயிரின் பொருட்டுப் படைக்கிறான் என்றும்; உயிர் அவற்றைக் கொண்டு பயன்தரு நெறியில் காலத்தைக் கழித்துப் பயன்பெற வேண்டுமென்றும்; உலக முதலியவற்றிற்கு அறிவின்மையாலும் உயிர்க்குச் சிற்றறிவுடைமையாலும் முற்றறிவுடைய சிவபெருமானே எல்லாவற்றையும் இயக்குகிறான் என்றும்; உயிருக்குக் காட்டும் உதவியையும் காணும் உதவியையும் செய்கிறான் என்றும்; முப்பொருள்களின் உண்மையை உணர்ந்து, உலகப் பற்றை ஒழித்துக் கடவுட் பற்றை உண்டாக்கிப் புறத்தொண்டாலும் புறவொழுக்கத்தாலும் அகவொழுக்கத்தாலும் அகத்தொண்டாலும் சிவபெருமானை வழிபட அவன் வெளிப்பட்டுத் தோன்றுவான் என்றும்; உயர் குல முதலிய போலிக் கொள்கைகளால் பயனில்லை என்றும் கூறுதல் காண்க. இங்குக் கூறப்பட்ட கொள்கைகள் நீங்கலாக மேலும் பல கொள்கைகள் அடிகள் தேவாரத்தில் காணப்படுகின்றன. ஆண்டுக் காண்க.

# திருவிசைப்பா

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

(பதிப்புரிமை ஆக்கியோர்க்குரியது)

(மலர் - எ, இதழ் - ௩, எ௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரர் சேகரனே
உனகழ லிணைஎன் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

(உரை) தனதன் - குபேரனுக்கு; நல்தோழா - நல்ல நண்பனே; சங்கரா - எல்லா உயிர்களுக்கும் இன்பம் செய்கின்றவனே; சூலபாணியே-சூலப்படையைக் கையில் தாங்கியிருக்கிறவனே; தாணுவே - பேரொளிப் பிழம்பாய் யாதொரு பற்றுக்கோடும் இல்லாதிருக்கின்றவனே; சிவனே - (எல்லா உயிர்களுக்கும் எப்பொழுதும் இன்பநலம் செய்யவல்ல) இன்ப வடிவினனே; கனகம் நல்தூணே - பொன்னாலாகிய தூண்போல மிளிர்கின்ற பொன்னிற மேனியனே; கற்பகக் கொழுந்தே - (விண்ணுலகத்திலுள்ள) கற்பக மரத்தினது கொழுந்து போல மெல்லியனாய் உயிர்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்துக் காக்கின்றவனே; கண்கள் மூன்று உடையது ஓர் கரும்பே - ஞாயிறு திங்கள் தீ மூன்றையும் மூன்று கண்களாக உடையவனாய் அடியார்களுக்குக் கரும்பின் சுவைபோல இனிமையாய் ஒப்பற்ற இன்பத்தை நுகரச் செய்கின்றவனே; அனகனே-இயல்பாகவே மலத் தொடக்கு இல்லாது தூய்மையா யிருக்கின்றவனே; விநாயக குமர சனக - தேவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தற் பொருட்டுப் பிள்ளையார்க் கடவுளையும் முருகக் கடவுளையும் நின்னிடமிருந்து தோற்றுவித்தவனே; அம்பலத்து அமரர் சேகரனே - (திருத்தில்லையிலுள்ள) பொற்சபையில் நடனம் செய்யும்போழ்து (தேவர்களெல்லாரும் உன்னைத் துதிக்கும்படி) தேவர்களுக்குத் தலைவனா யிருக்கின்றவனே; உன கழல்இணை - நினது இரண்டு திருவடிகளையும்; என் நெஞ்சி



னுள் - (மலமூன்றுஞ் செற்றுச் சிவமாய் மாறிய) எனது உள்ளத்தில்; தொண்டனேன் - நினக்குத் தொண்டு செய்கிற அடியனாகிய நான்; இனிது நுகருமா(று)-எனது தன்மைக்குப் பொருந்த, நினது பேரின்பத்தை நான் நுகரும்படி; நுகர் - நீ என்னோடு உடனாய் நின்று அப்பேரின்பத்தை நுகர்ந்தருளச் செய்வாயாக.

(விளக்கம்) தனதன்நற்றோழன் - எல்லாப் பொருட் செல்வங்களையும் உடையவனாகிய சிவபெருமான் அவைகளைக் குபேரனுக்குக் கொடுத்து அவனை அவைகளுக்குத் தலைவனாகச் செய்தார் என்பது திருமூலர் திருமந்திரம் 18-வது பாட்டில்,

“ அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவ நோக்கின்
அதுபதி யாதரித் தாக்கம தாக்கி
இதுபதி கொள்ளென்ற எம்பெருமானே ”

என்று கூறப்பட்டிருத்தல் காண்க. இதனால் சிவபெருமான் உலகப் பொருள்களிடத்திற் பற்றில்லாதவன் என்பது குறிக்கப்படுகிறது. சங்கரா - வடமொழிச்சொல் சம்+கரன்=சங்கரன் சம்=இன்பம் - கரன்=செய்கிறவன். சூலபாணி - சூலம் என்பது மூன்று கவர்களையுடைய ஒரு படை(Trident)பாணி=கை. உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு சிவபெருமான் கொள்கிற மாயா வடிவங்கள் அனைத்தும் அருள்மய வடிவங்கள் - திரிசூலப் படையானது அவனுடைய விழைவு அறிவு செயல்களின் ஆற்றலை (இச்சாஞானக் கிரியாசத்திகளை)க் குறிக்கின்றது. அவன் திரிசூலப் படையைக் கையில் வைத்திருத்தலானது விழைவு அறிவு செயல்களின் ஆற்றலால் உயிர்களுடைய மாயை கன்மம் ஆணவம் ஆகிய மும்மலங்களையும் கெடுத்து அவைகளை அம்மலக்கட்டுகளிலிருந்தும் விடுவிக்கின்றான் என்ற உண்மையைக் காட்டுகிறது. கனகநற்றூணே - ‘பொன்னார் மேனிய’னே என்று சுந்தரமூர்த்தி அடிகள் தேவாரத்தில் (24—1) கூறியிருத்தல் காண்க. வடமொழிச்சொல் அனகன் - அன்+அகன் (அகம் பாவம் அல்லாதது) அதாவது அறம். அனகன் என்பது அறவடிவினன் அதாவது அநாதியேமலத் தொடக்கில்லாததுபற்றியுள்ள தூய்மையானவன் என்பது பொருள். விநாயககுமரசனக. சனகன் வடமொழிச்சொல் (சனக) பிதா. கயமுகா சூரனால் தேவர்களுக்கு உண்டான துன்பத்தை நீக்கும் பொருட்டுப் பிள்ளையார்க் கடவுளையும் சூரபன்ம அசுரனால் தேவர்களுக்கு உண்டான துன்பத்தை நீக்கும் பொருட்டு முருகக்கடவுளையும் சிவபெருமான் தன்னிடமிருந்து தோற்றுவித்தனன் ஆதலின் விநாயக குமரசனக என்றார். அமரர்

சேகரன் - சேகரம் - வடமொழிச்சொல். தலை - அமரர் சேகரன் = தேவர்களுக்குத் தலைவன் அம்பலத்து அமரர்சேகரன் என்றமையால் உயிர்கள் தன்னை அடைந்து இன்பம் பெறும் பொருட்டு இறைவன் ஒழிவின்றிச் சலியாது பணி செய்யும் முகத்தான் அவனுக்குத் தலைமை உண்டாயது என்பது குறிப்பிடப்பட்டது. உன கழலிணை நுகருமாறு - வீடுபேறு என்பது இறைவன் திருவடிகளை அடைதல் ஆதலின் உன கழலிணை நுகருமாறு என்றார். 'அயரா அன்பின் **அரன் கழல் செலும்** என்று சிவஞானபோதம் 11-வது சூத்திரம் கூறுதல் காண்க. இறைவனுடைய திருவருளே திருவடிகள் ஆதலால் அத்திருவருளின்கண் அடங்கியுள்ள நிறைவு அறிவு விழைவு செயல்களில் உயிரினுடைய அறிவு விழைவு செயல்கள் அடங்கித் தன்முனைப்பின்றி நிற்க இறைவனுடைய எண்குணங்களும் உயிரினிடத்துப் பதிந்து விளங்கப்பெறுதல் வீட்டின்பமாகும் என்க. இனிது நுகருமாறு - இறைவனது பேரின்பம் எல்லையிலது ஆதலின் வீட்டு நிலையை அடைகிற ஒருயிர் அதன் தன்மைக்கேற்ப நுகரமுடியும் ஆதலின் இனிது நுகருமாறு என்றார். இனிது Agreeably Harmoniously. நுகருமாநுகர் - நுகருமாறுநுகர் என்பது விகாரப்பட்டு நுகருமா எனக் குறைந்து நின்றது. உயிர் தனது கட்டு நிலைக்கண் உலக விடய இன்பம் நுகர்தற்கு, இறைவன் உயிரினொடு அவ்விடயத்திலும் சென்று இயைந்து நுகர்தல்போல, தனது கட்டு நீங்கிய மேலான வீட்டு நிலைக்கண் பேரின்ப நுகர்தற்கும் இறைவன் அவ்வுயிரிற்றங்கி நின்று பேரின்பம் நுகர்வன். இருதிறத்தும் உயிரானது இன்பம் நுகர்தற்கு இறைவனுடைய காணும் உதவி இன்றியமையாது வேண்டப்படுவதாகும். ஆனால் உயிருக்குக் கூறுங்கால் நுகர்தல் என்பது அழுந்தி அறிதலாகும். இறைவன் நுகர்வன் என்பதற்கு இறைவன் அறிவன் என்பதே பொருள். இறைவன் அழுந்தி அறிதல் எக்காலத்தும் இல்லை. ஆசிரியர் இந்தப் பாட்டில் இறைவனை விளித்துக் கூறும் பதினொரு பெயர்களில் ஒவ்வொன்றும் உயிரானது இன்பம் நுகரும் பொருட்டு இறைவனுக்கு உளதாகிய வடிவம் அல்லது குணம் அல்லது தொழிலைக் குறிக்கிறது.



# சேக்கிழார் காலம்

(தி. கி. நாராயணசாமி நாயுடு)

**புராணக் குறிப்புக்கள்:**

பெரியபுராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் *பத்திடத்தில் மன்னர்பெருமான் அநபாயரை அருளுகின்றார். அவ்விடங்கள் சோழர் பழம்பதி †ஐந்தை அவதார விடமாகக் கொண்ட ‡நாயன்மார்கள் வரலாற்றிலும், சோழ மன்னரே §நாயன்மார்களாக வருமிடத்தும், ||சோழ நாடு, நகரச் சிறப்புகளிலும் ¶அவையடக்கத்திலும் வருதல் காண்க. இப்பத்துப் பாக்களிலிருந்து சேக்கிழாரால்போற்றப்படும் சோழ அரசன், அபயன், குலோத்துங்கன் என்ற பொதுப் பெயரும் அநபாயன் என்ற சிறப்புப் பெயரும் பூண்டு, தில்லைத் திருவெல்லையைப் பொன்னின் மயமாக்கி, வீதிகளை விளக்கி, பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தமை தெரிகிறது.

**காலக் கருத்துகள் :**

சுவாமிகளது காலத்தை இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை திருவாளர் சோமசுந்தர தேசிகர் அவர்கள் **'முதற் குலோத்துங்கன் காலமல்ல ; அதற்கு முற்பட்ட தென்ப'ர்.

காலஞ் சென்ற பிரம்மஸ்ரீ து. அ. கோபிநாதராவ் அவர்கள் '††திருவாரூர் ‡‡சாசனம் ஒன்றில் இவன் (முதற்

---

*8, 22 (இடைச்செருகல்), 85, 98, 404, 552, 1218, 2750, 3954, 4215.

†உறையூர், கருவூர், காவிரிப்பூம்பட்டினம், திருச்சேய்ஞலூர், திருவாரூர்.

‡இயற்பகையார் 1, எறிபத்தர் 2, சண்டேசுரர் 8.

§புகழ்ச்சோழர் 8, கோச்செங்கண்ணர் 14.

||நாட்டுச் சிறப்பு 35, நகரச் சிறப்பு 13.

¶செய்யுள் 8.

**சைவ சிகாமணிகள் இருவர் - பக்கம் : 120.

††சோழவம்ச சரித்திரம் - பக்கம் : 27.

‡‡S. I. I. Vol vii. No. 485. (269/1901).

குலோத்துங்கன்) அநபாயன் என்று அழைக்கப்படுகிறான்' என்று கொண்டு *சேக்கிழார் காலத்தை முதற் குலோத்துங்கன் காலம் (1070-1118) என்றார். இக்கருத்தைப் பின்பற்றித் திருவாளர்கள் †சுப்பிரமணியம் பிள்ளை, செல்வக்கேசவராயமுதலியார், ‡மகாதேவ முதலியார், §பூர்ணலிங்கம் பிள்ளை முதலியோர் பெரியபுராண காலத்தை முதற் குலோத்துங்கன் காலமெனக் கொண்டார்கள்.

இக்காலம் 1901ஆம் ௵த்தில் சாசன இலாகாவால் படி எடுக்கப்பட்ட 269-ம் நெம்பர் கல்வெட்டைப் பொருத்திருந்தது. அந்நாளில் இரண்டாம் குலோத்துக்கனைப்பற்றி|| ஒன்றுமே தெரியாதிருந்ததால் 1901௵ திருவாரூர் கல்வெட்டில் வரும் குலோத்துங்கன், அநபாயன் என்ற பதங்கள், தெரிந்த முதற்குலோத்துங்கனையே குறிப்பதாகக் கொண்டார்கள்.

அத்திருவாரூர் கல்வெட்டின் சுருக்கம் வருமாறு:—

**ஆரூர் கல்வெட்டு**

(1) ¶பூமன்னுபதுமம் பூத்த.......(4) கோவிராஜகேசரிபன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு எ-வது திருவாரூர் உடையார் ஸ்ரீமூலத்தனமுடையார் கோயிலில் எருந்தருளியிருக்கும் ஆளுடையநம்பிக்கும் பரவை நாச்சியார்க்கும் அற்சனாபோக இறையிலியாக பழம்பெயரும் முன்னிறை கட்டின படியுந் தவிர்ந்து யாண்டு எ-வது முதல் அநபாயநல்லூ ரேன்னுந் திருநாமத்தால் * * * * (11) இக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் ஆளுடையபிள்ளையார்க்கும்

*செந்தமிழ் தொகுதி 3 - பக்கம்: 188.

†அவரது சேக்கிழார் சரித்திரமும் இலக்கிய வரலாறும் பார்க்க.

‡அவரது பெரிய புராண ஆராய்ச்சி பார்க்க.

§அவரது History of Tamil Literature பார்க்க.

||இவனையும் (குலோத்துங்கன் II) இவன் மகன் இரண்டாம் இராஜராஜனையும் பற்றி ஒன்றும் தெரியவில்லை. * * * இவர்கள் செயல்கள் ஒன்றும் தெரியவில்லை. சோழ வம்ச சரித்திரம் - பக்கம்: 37. [1910]

¶மெய்க்கீர்த்தி.



திருநாவுக்கரசு தேவர்க்கும் வேண்டும் அற்சனைகளுக்கு........ (32) *ஸ்ரீமத் ப்ரஹ்ம புரீசவாகதிபதிஸ்வ ஸ்வாமி மித்ரஸ்சயே - தேப்யோஹேம சபாதிநாத சரணன்யாசொல்ல சுன்மஸ்தக - ப்ரதாத்பூமி ஹிரண்ய கம்சரஜதானன் யான்தனுன் சோக்தமான - ஸ்ரீ யாருரதிபஸ்யமூல வஸதௌதே வான பந யோக்ருப.

இது நிற்க பூமன்னுபதுமம் என்ற மெய்க்கீர்த்தியுடைய திருமாகாளத்து 1910௵ 109 நெ. கல்வெட்டில்........(4) 'ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு கக பதினொன்றுவது தநுஞாயிற்று இரண்டாந்தியதியும் சனிக்கிழமையும் பெற்ற பூசத்தி[ன்] நாள்', என வரும் காலக்குறிப்பைக் கணித்ததில் இவ் வெட்டில் காணும் குலோத்துங்கர், கலிங்கத்துப் பரணிகொண்ட முதற்குலோத்துங்கர் அல்ல என்றும் அவர் இரண்டாம் குலோத்துங்கரே என்றும் †சூவல் (Mr. Sewell) துரைமகனார் 1912-ல் முடிவு கட்டினார்.

**'பூமன்னு பதுமம்' குலோத்துங்கர் II மெய்க்கீர்த்தி**

பூமன்னு பதுமம் என்ற ஆரம்பமுடைய இச்சாசனத்தின், கால கணிதத்தால் ஏற்பட்ட கருத்து வேறுபாடு மேலே விவரிக்கப்பட்ட இப் பூமன்னு பதுமம் என்ற ஆரம்பமுடைய திருவாரூர் கல்வெட்டுக்கும் இசைவதாகி வெட்டின் காலமும் பெரியபுராண ஆசிரியர் காலமும் இரண்டாம் குலோத்துங்கரது காலமாகி(1133-1146)அவரே

* இதனை S. I. I. Vol. II. p. 153 & Vol. IV No. 397லும் பார்க்க. இவ்வடமொழிச் சுலோகத்தின் கருத்தாவது:—திருவாரூர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள திருஞானசம்பந்தர் (பிரமபுரீசர்) அப்பர் (வாகபதி) சுந்தரர் (ஸ்வஸ்சாமி மித்திரர்) இவர்களுக்கு நிலம், பொன், பித்தளை, வெள்ளி முதலியவை பொன்னம்பலம் போற்றும் அநபாய மன்னன் தந்தான். புலியூரில் பொன்னம்பலத்து நடேசர் பாதாரவிந்தத்தில் வண்டாக (மொய்க்கும்) அநபாயன்.

†Ep. Report. 1912 p. 67.

அநபாயர் என்றும் ஆயிற்று. அவரே முதற் குலோத்துங்கருக்குப் பேரனும் விக்கிரமசோழருக்குப் பிள்ளையும் ஆவார் என்பது சகம் 1065-ல் ஏற்பட்ட *செல்லூர் செப்பேட்டால் தெரிகிறது. †பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார் அவர்கள் குலோத்துங்கன் உலாவின் கண்ணிகளிலும் இறுதியிலுள்ள வெண்பாவிலும் 'அநபாயன்' பயின்று வருவதால் விக்கிரம சோழன் (அகளங்கன்) மகனை இரண்டாம் குலோத்துங்கனே அநபாயன் என்றார்.

**இரண்டாம் குலோத்துங்கரே அநபாயர்**

1911ஆு 395 நெ. கல்லெழுத்தில் 'பழம்பேர் தவிர்த்து அநபாயநல்லூர் என்று' பேரிடச் சொல்வது, ஈண்டு சிந்திக்க உரியது. இவற்றால் இரண்டாங் குலோத்துங்கரே அநபாயர் என்று சிலாலேகையாலும் அவரது ‡உலாவாலும் தெரிகிறோம்.

## அநபாயர் வரலாறு

**ஆட்சிகாலம்**

இவர் கி. பி. ‡1133 (மே. 10 முதல் ஜூலை 14-க்குள்) 'செம்பொன் வீரசிம்மாசனத்து திருமுத்துப் பந்தலின் கீழ் எழுந்தருளி' கி. பி. §1146 (மே 22 முதல் ஜூன் 26-க்குள்) வரை ஆட்சிபுரிந்து, பின் §1148 (செப்டம்பர் 15) வரை தன் மகன் இரண்டாம் இராஜராஜர் அரியணை ஏறிய பின்னும் வாழ்ந்தமை தெரிகிறது.

---

*Indian Antiquary XIV p. 55.

†செந்தமிழ் தொகுதி 3 - பக்கம் : 298, 348.

‡வரி 317, 627 வெண்பா.

§Historical Inscriptions of South India P.101,106,107.



**மெய்க்கீர்த்திகள்**

இவர்க்கு [1]பூமருவிய புவி ஏழும், [2]பூமன்னு பதுமம், [3]பூமன்னு பாவை, [4]பூமன்னு யாணர், [5]பூமேவி வளர், [6]பூமேவு திருமகள் என்ற ஆரம்பமுடைய மெய்க்கீர்த்திகளும்; ராஜகேசரி, திரிபுவன சக்கரவர்த்திகள், சிவபாதசேகரர், கலிகடிந்த சோழர், கோநேரின்மை கொண்டார் முதலிய விருதுகளும் உண்டு.

பூமருவிய என்று தொடங்கும் *1901ஆு 106நெ. சாசனத்தில் 'நம்பேராற்திருநீற்றுச்சோழன் திருமடைவிளாகமென்று' பேர் இடுமாறும், 1911ஆுத்து 363 நெ. சாசனத்தில் 'பழம் பேர் தவிர்த்து குலோத்துங்கசோழன் திருநீற்றுச்சோழநல்லூர் என்று பேரிட்டு' என்று கூறுவதாலும் இவர்க்கு அப்பெயர் உள்ளமை தெரிகிறோம். இக்கருத்தைக் கோயிற்புராண பாயிரம் ௧௨-லும் சிதம்பரபுராணம் பாயிரம் ௧௧-லும் பார்க்க.

இவரது †உலாவும், ‡இராஜராஜர் உலாவும் §தக்க யாகப் பரணியும் இவர் தில்லை திருச்சித்திரகூடச் செங்கண்மாலைப் பெயர்த்துக் கடலில் இட்டதைக்கூறுகின்றன. இதனை ¶குருபரம்பரை பிரபந்தமும் ||இராமானுஜார்ய திவ்விய சரிதையும் கூறுகின்றன. குருபரம்பரைப் பிரபந்தம் இவரை **கிரிமி கண்டன்** என்று கூறுகிறது.

---

இம்மெய்க்கீர்த்தி குறிப்புகள் பிரம்மஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரியார் உதவியன.

1. S. I. I. Vol. V. No 268.
2. S. I. I. Vol. VII No 1038.
3. S. I. I. Vol. IV. No 282. Vol VII No 43.
4. S. I. I. Vol. V No 643.
5. S. I. I. Vol. VII No 136.
6. 572 of 1907.

*S. I. I. Vol. VII No 407.

†வரி 77. ‡வரி 65. §கண்ணி 777.

¶செய்யுள் 795.

||பக் - 239.

**அம்பலப் பொன்**

திருச்சிற்றம்பலத்தை [1]ஆதித்தர், [2]பராந்தகர், [3]முதற் குலோத்துங்கர், விக்கிரமசோழர் முதலியோர் பொன் வேய்ந்தனர். பேரம்பலம் சிற்றம்பலத்திற்கு வேருயதொரு இடமென்று பெரியபுராண 250, 2061, 3806-ம் பாக்களும் கோயிற்புராண விழாச்சருக்கத்து 19-ம் செய்யுளும் கூறும். இப்பேரம்பலத்தை அநபாயர் பொன் வேய்ந்ததை பெரியபுராணமும் *உலாக்களும் கூறுகின்றன.

†கோகர்ணக் கல்வெட்டு.......பேரம்பலம் பொன்மேய்ந்த கோராஜ கேசரிப் பன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு கஉ-வது பூமன்னு தென்கவிரநாட்டு.......என்று இருப்பதால் இங்குக் காணும் பூமன்னு, அநபாயர் மெய்க்கீர்த்தியின் முதற் சொல்லுக்கு ஒத்திருத்தல் கவனிக்கத்தக்கது. இதுவே அன்றி ‡சாசனங்களும் ‘பேரம்பலம் பொன்வேய்ந்தருளின கோராஜகேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு’ என்று கூறுவதும் இதனை வலியுறச் செய்கிறது.

**திருப்பணியும் பிறவும்**

திருவாரூர் சாசனத்தினுல் இவர் தில்லைக்கூத்தப் பெருமான், மூவர் ஆகியவர்கள் பால் அன்பு பூண்டமை தெரிகின்றோம். இவருடைய காலத்து §திருவாமத்தூர் சல்வெட்டில்........ கோயிலில் திருப்பதிகம் பாடி வரும் குருடர்கள்........பேர்பதினறுவரும் இவர்களுக்கு கண் காட்டுவார் இருவரும் ஆகப் பேர்பதினெண்மர்........மூன்று சந்தியும் வந்து விண்ணப்பஞ் செய்து’ என்றும், இவருடைய ||களத்தூர் சாசனம்

1. இடங்கழி நாயனர் புராணம் : செ - 3.
2. A. S. I. 1905 - 06.
3. S. I. I. Vol. IV No 225.
4. S. I. I. Vol. V No 458.

*கு. உலா வரி 93. ரா. உலா. வரி 58.

†S. I. I. Vol. VII. No 1044.

‡350/1927, 315/1929, 349/1929.

§433/1903. ||346/1911.



‘குலோத்துங்கச்சோழன் திருத்தோண்டத்தோகை நல்லூரென்னும் பெயரால் வேறு பிரித்து’ என்றும் கூறுவதால் இவர்க்குத் திருமுறையின்பாலிருந்த அன்பு தெரிகிறது.

தன் பெயரால் திருச்சி ஜில்லா ஊட்டத்தூரில் குலோத்துங்க சோளீச்சரம் எடுத்தார். இவர் சிதம்பரத்தில் பல பணிகளைச் செய்ததை உலாகூறுகிறது. இவர்க்குப் பிள்ளைத் தமிழ் ஒன்றுண்டு. அது பூமன்னு என்று ஆரம்பமுடையது. இவரது அரசி புவனமுழுதுடையாள். குமாரர் இராஜராஜர். திருமந்திர ஓலைக்காரர் அநபாய மூவேந்த வேளான். இவர் காலத்து, இவரது உலா, பிள்ளைத்தமிழ் ஆசிரியராகிய ஒட்டக்கூத்தர் இருந்தார் என்பர். தண்டியலங்காரத்து மேற்கோள் செய்யுட்களில் இவரைப் புகழும் பாக்கள் எட்டுள.

**பாலறவாயர்**

தஞ்சை ஜில்லா கோட்டூர் *சாசனத்தில் வரும்பாலறுவாயன் களப்பாளராயரை பாலறுவாயர் (சேக்கிழார் இளவல்) மகனகக் கொண்டாலும் சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கர் காலத்தவர் என்பது ஏற்படுகிறது.

இதுவரை நமக்கு கிடைத்த சாசனங்களாலும் பழைய சரித்திர சம்பந்தமான தமிழ் நூல்களாலும் சேக்கிழார் பெருமான் பன்னிரண்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வதிந்தவர் என்று தெரிகிறது.

இதன் விரிவுக்கு செந்தமிழ்ச் செல்வி கூ, கO, தொகுதிகளில் கோவை ராவ்சாகிப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B.A., B.L., அவர்களது சேக்கிழார் கட்டுரை பார்க்க.

*(ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர் [III] யாண்டு இரண்டாவது இராஜே........குலோத்துங்கசோழ வளநாட்டு குன்றத்தூர் நாட்டு குன்றத்தூர் சேக்கிழான் பாலறுவாயன் களப்பாளராயர்......உபையமாக ஒரு நொந்தா விளக்கு.)

**அகச்சான்று :** இறைவனை அமணர் மறைத்தமைக்கு,

" தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னால்மறைத் தால்மறைக் கொண்ணுமோ "

என்னும் தேவாரமும் சான்றாகும்.

" மூக்கினான் முரன்று ஓதியக் குண்டிகை
தூக்கினார் குலத்தூர் அறுத்தே தனக்காக்கினான் "

என்பதால் சமணர்குலத் தூர்அறுத்தமை விளக்கமாகின்றது.

## இறைவனளித்த போதி சோறு உண்ணல்

வாகீசர் திருப்பழையாறையினின்றும் நீங்கித் திருவானைக்கா முதலிய தலங்களை வணங்கிக் காவிரியைக் கடந்து திருப்பைஞ்ஞீலிக்குப் போக எழுந்தனர். திருப்பைஞ்ஞீலிக்குப் போகும் வாகீசப் பெருந்தகையார்க்கு நீர் வேட்கையும் பசியும் வந்தணைந்தன. அதைப் பொருட்படுத்தாது மேலும் செல்வதைக் கண்ட பரமசிவன் தொண்டர் துயரம் தீர்ப்பதனுக்குத் திருவுளம்பற்றினர். துயரந் தீர்ப்பான் அந்தணர் வடிவந்தாங்கி வாகீசர் போகும் வழியில் காவுங் குளமும் அமைத்துப் பொதிசோறும் கொடுவந்து வாகீசர் எதிரே போந்தனர். போந்தவர் வாகீசரை நோக்கி 'நீர் மிகவும் வழிநடந்து இளைத்திருக்கின்றீர். என்பால் பொதிசோறு உண்டு. இதனை உண்டு இக்குளத்தில் தண்ணீர் குடித்து இளைப்புப் போக்கி போவீர்' என்று புகன்றனர். இதனைக் கேட்ட வாகீசர், 'இது இறைவன் திருவருள் போலும்' என்று உணர்ந்து, சோற்றை உண்டு நீர் அருந்திக் களைப்புத் தீர்ந்தனர். மறையவர் 'அப்பால் எங்குப் போவது' என்றார். வாகீசர், 'திருப்பைஞ்ஞீலிக்குப் போகின்றேன்' என்றனர். மறையவர் 'நானும் அங்கே போகின்றேன்' என்று அவருடன் சென்று திருப்பைஞ்ஞீலி சமீபித்தவுடன் திருவுருக்கரந்தனர். வாகீசர், 'இறைவன் கருணை இருந்தவாறு என்னே' என்று அவன் கருணையைப் பலபடத்



துதித்தனர். பின்னர் பைஞ்ஞீலிக்குச் சென்று பதிகம்பாடி அங்கேயே சிலநாள் தங்கியிருந்தனர்.

**அகச்சான்று :** பொதிசோறு கொடுத்த அற்புதத்தை விளக்கிய பதிகம் சிதலமானவற்றிற் சேர்ந்தது போலும். இதற்குப் பெரியபுராணமுடையார் கூற்றே ஆதாரம்.

" தன்னடியார்க்கு அருள்புரிந்த தகவு தோன்றும் "

என்னும் தேவாரத்தில் இத்தகைய அற்புதங்கள் அடங்கும் போலும்.

## திருக்கைலைக்குச் செல்லுதல்

திருப்பைஞ்ஞீலியை அரிதின் நீங்கி மலைநாட்டுப் பதிகள் பலவற்றை இறைஞ்சித் திருவண்ணாமலையைச் சார்ந்தனர். வாகீசர் திருவண்ணாமலையினின்றும் தொண்டைநாட்டுக்குப் போய்ப் பதிகம்பாடி வணங்கித் திருக்காளத்திக்குப் போந்தனர். அங்கே சில நாள் தங்கியிருந்து பெருந்தகைக்குச் சிவபெருமான் கைலையில் உமையாளோடு வீற்றிருக்கும் சிறப்பைக் காணக் காதல் உண்டாயிற்று. கைலைக்குச் செல்வான் பற்பல தேயங்களையும் கடந்து சென்று வாரணாசியையடைந்தனர். வாரணாசியினின்றும் கற்சுரங்களைக் கடக்க வேண்டியதாயிற்று. நெடுந்தூரம் நடந்து வந்தமையின் கால்களில் உள்ள தசை பாட்டு அளவு தேய்ந்து போயிற்று. கால்கள் தேயவே, வாகீசர் கைகளால் தாவிச் செல்லலுற்றனர். கைகளும் கரைந்து இளகிப்போயின. பின்னர் மார்பால் நகர்ந்து சென்றனர். மார்புந் தேயப் புரண்டு புரண்டு சென்றனர். உடம்பில் உள்ள உறுப்புக்கள் எல்லாம் தேய்ந்து தேய்ந்து நையவே, செல்லும் முயற்சியின்றி ஒருசார் செயலற்று இருந்தனர். பன்னகம் புனைபரமர் அடியார் இடுக்கண் தரியாதவராதலால், அடியவர்க்கு அருள் செய்வான் முனிவரர் படிவந் தாங்கிப் போந்து, 'நீ ஏன் இந்தப் பாலைவனத்திடை உறுப்பழிய வந்தனை ?' என்றனர். அப்போது மாசில்வற்கலை யாடையும் மார்பின் முந்நூலும், தேசுடைச்சடை மவுலியும் மெய்யிற்றிகழுந் திருநீறும் விளங்கும் ஆசில் மெய்த்தவரை எதிர் நோக்கிய மாத்திரையில்,

நாவின் மன்னர்க்குப் பேசுதற்கு உணர்வு உண்டாகி மறு மொழி கூறுவாராயினர். 'முனிவரே! வண்டுவார் குழல் மலைமகளுடன் வடகயிலையில் அண்டர் நாயகர் இருக்கும் அப்பரிசு அடியேன் கண்டு கும்பிட்டு எழுந்த காதலால் இங்கு அடைந்தேன். இதுவே என் குறிப்பு' என்றனர். வாகீசர் புகன்றவைகளைக் கேட்ட முனிவர்,

> "கயிலை மால்வரை யாவது காசினமருங்கு
> பயிலுமானுடப் பான்மையோ ரடைவதற் கெளிதோ
> அயில்கொள் வேற்படை அமரரும் அணுகுதற் கரிதால்
> வெயில்கொள் வெஞ்சுரத்து என்செய்தீர் வந்தெனவிளம்பி"

முனிவர் இவ்வாறு பகர்ந்து இனி மீண்டு போவதே கடன் என்றனர். அதனைக் கேட்ட வாகீசர்,

> "ஆளுநாயகன் கயிலையி னிருக்கைகண் டல்லால்
> மாளுமிவ் வுடல்கொண்டு மீளேன்"

என மறுத்தார். மறுத்த வாகீசர், துணிவினைக் கண்ட முனிவர், ஆகாயத்தில் மறைந்து 'நாவுக்கரசனே! எழுந்திரு' என்று உரைக்க, வாகீசர் தீங்குநீங்கி எழுந்து,

> "அண்ணலே எனை ஆண்டுகொண் டருளிய அரசே
> விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
> கண்ணினால் திருக்கையிலையி லிருந்த நின்கோலம்
> நண்ணி நான்தொழ நயந்தருள் புரிஎனப் பணிந்தார்"

தொண்டர் கூறியதைக் கேட்ட இறைவன் 'இப் பொய்கையில் மூழ்கி நாம் கயிலையிலிருந்த கோலத்தைத் திருவையாற்றில் காண்' எனப் பணித்தனர். இறைவன் பணித்த வண்ணம் வாகீசர் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றின்கண் உள்ள ஒரு வாவியின்மீது உலகெலாம் வியப்பத் தோன்றினார். தோன்றினவர், வம்புலாமலர்க் கரையின் வந்தேறி உம்பர்நாயகர் திருவருட்பெருமையை உணர்ந்து,

> "ஏழையேனாகிய என்பால் எம்பிரான்
> பெருங்கருணை இருந்தவாறு என்னே"

என்று வியந்து கொண்டாடி, இரு கண்களினின்றும் ஆனந்த



பாஷ்பம் பொழிய மீட்டும் வாவியில் மூழ்கி எழுந்த தன்மைய ராயினர். வாவியினின்றும் எழுந்தவர் திருக்கோயிலுட்புக்கு,

> "வெள்ளி வெற்பின் மேல்மரகதக் கொடியுடன் விளங்குந்
> தெள்ளு பேரொளிப் பவளவெற்பென இடப்பாகங்
> கொள்ளு மாமலையா ளுடன்கூடி வீற்றிருந்த
> வள்ளலாரை முற்கண்டனர் வாக்கின் மன்னவனார்"

இறைவன் கைலையில் வீற்றிருக்கும் கோலத்தைக் கண்ட வாகீசர்,

> "கண்ட வானந்தக் கடலினைக் கண்களான் முகந்து
> கொண்டு கைகுவித்து எதிர்விழுந்து எழுந்து மெய்குலைய
> அண்டர்முன்பு நின்றாடினார் பாடினார் அழுதார்
> தொண்டனார்க் கங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார்"

இறைவன் திருக்கோலத்தைக் கண்ட வாக்கின் மன்னர் பற்பல பதிகங்கள் பாடித் துதித்துக்கொண் டிருந்தனர். திருவையாற்றழகர் தாம் அடியவர்க்குக் காட்டிய கோலத்தை மறைத்தருளினார். வாகீசர், ஐயர் திருவருள் இதுவோ' என்று தெளிந்து, மாதர் பிறைக்கண்ணியானை என்னும் திருப் பதிகத்தினை உலகம் உய்ந்திடப் பாடியருளினார். இன்னும் பற்பல திருத்தாண்டகங்கள், 'குறுந்தொகைகள், நேரிசைகள் முதலியன பாடி 'திருத்தொண்டு செய்துகொண்டு திருவையாற்றின் கண்ணேயே அமர்ந்திருந்தார்.

**அகச்சான்று:** வாகீசர் திருக்கைலையைக் காணச் சென்றதாகச் சொல்லும் கூற்றினுக்கு அருண்மொழித் தேவர் வாக்கே ஆதாரம். அப்பர் தாம் பாடியருளிய ஏனைய பதிகங்களில் இவ்வற்புதத்தைப்பற்றி யாதும் கூறிற்றிலர். ஐயாற்றுப் பதிகத்தில்,

> "ஐயாறடை கின்றபோது காதன்மடப் பிடியோடுங்
> களிறுவருவன கண்டேன்-கண்டேன்
> அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

என்று கூறியிருப்பதையும் அருண்மொழித் தேவர் வாக்கினையும் பொருத்திப் பார்க்கும்போது இப்பதிகம் இறைவன் காட்டிய கோலத்தை வியந்து பாடியதாகக் கூறலாம்.

## ஞானசம்பந்தப் பெருமானை மீட்டும் சந்தித்தல்

திருவையாற்றை அரிதினீங்கி திருப்பழனம் முதலிய தலங்களைத் தரிசித்துத் திருப்பூந்துருத்தியைச் சார்ந்து அங்கே சில நாள் தங்கியிருந்தனர் வாகீசர்.

"பொன்னிவலங் கொண்ட திருப்பூந்துருத்தி இவர்இருப்பக்
கன்மனத்து வல்லமணர் தமைவாதிற் கட்டழித்துத்
தென்னவன் கூன்நிமிர்த்தருளித் திருநீற்றி னொளிகண்டு
மன்னிய சீர்ச்சண்பைநகர் மன்னவனார் வருகின்றார்"

ஞானம் பெற்ற பிள்ளையார் திருப்பூந்துருத்திக்கு வருவதை உணர்ந்த வாகீசர் அவரைக்கண்டு இறைஞ்சவேண்டும் என்னும் கழிபெருங் காதலினால் எதிர் சென்றனர். எதிர் சென்ற அப்பர் ஞானம் பெற்ற பிள்ளையாருடன் வரும் அடியவர்கள் நடுவண் புகுந்து நெருக்கினால் யாவரும் காணாமல் தொழுதருளி பிள்ளையார் ஊர்ந்துவரும் சிவிகையினைத் "தாமும் உடல் இது கொண்டு தாங்குவன் யான் எனத் தாங்கி மகிழ்வெய்தினர். ஆளுடைய பிள்ளையார் திருப்பூந்துருத்திக்கு அருகே போந்து, 'எங்குற்றார் அப்பர்?' என்று வினவினார் அப்பர், 'உருகா நின்று உம்மடியேன் உம்மடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு பெற்று இங்குஉற்றேன்' என்றனர். அது கேட்ட பிள்ளையார் பெருகு விரைவுடன் சிவிகையினின்றும் இழிந்துஉள்ள மிகப் பதைப்பெய்தி உடைய அரசினை வணங்கினர்,வள்ளலார் வாகீசர் அவர்வணங்கமுன்வணங்கத்தொண்டரெலாம் தொழுது ஆர்த்தனர். ஞானம்பெற்ற பிள்ளையாரும் வாகீசருடன் கலந்து திருப்பூந்துருத்தியில் மேயபிரானை வணங்கி அங்கேயே சிலநாள் தங்கியிருந்தனர். ஆளுடைய பிள்ளையார் தொண்டைநாட்டுப் பதிகளை வணங்கப் பூந்துருத்தியினின்றும் அரிதின் நீங்கினர்.



மன்னனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்குஞ் சிவபெருமானே, மூவுலகங்களையும் ஊடுருவும்படி அயன்மால் இருவரும் மேலுங்கீழுஞ் சென்று தேடும்படி ஒலிக்கின்ற அனற்பிழம்பாய் உயர்ந்து நின்றவனே, யானைத்தோல் போர்த்தவனே, இவ்வுலகில் வாழமாட்டேன். வருகவென்றருள் செய்வாயாக.

**குறிப்பு** :—மூவுல குருவ என்பதை இருவர் என்பதனோடும், கீழ்மேலாய் என்பதை நிமிர்ந்தானே என்பதோடும் முழங்கு என்பதை அழலாய் என்பதோடு முடித்தலுமுண்டு. மாவுரி யென்பது புலித்தோலையுங் குறிக்கும். ௧

பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

**உரை** :—குற்றமற்ற பழமையான புகழையுடைய உமையம்மை பாகனே, உன்னையன்றி வேறு ஆதரவில்லாதேன். செழுமையுற்ற பிறையினை யணிந்தவனே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையிலெழுந்தருளி யிருக்குஞ் சிவபெருமானே, உன்னைத் தவிர பிற தேவர்களை வணங்குவேனோ, வாழ்த்துவேனோ, எனக்குதவியாகக் கருதுவேனோ கூறியருள்க. இளங்காளையை வாகனமாக உடையவனே, இவ்வுலகில் வாழமாட்டேன், வருகவென்றருள் செய்வாயாக.

**குறிப்பு** :—சிவத்தோடு சத்தியும் யாண்டு முண்மையால் அவள் கீர்த்தியைத் தொல்புகழ் என்றார். சந்திரன் கடவுளை யடைந்து செழுமை யுற்றமையால் செழுமதி என்றார். தொழுவனோ, துதிப்பனோ, நினைவனோ என்றமையால் மனம் வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் பிறரைவழிபடேன் என்றுகுறிப்பித்தார். வருகவென்றருள்புரிதல் அறம்என்பார், அறத்திற்கு அறிகுறியாகிய விடையைக் கூறினார்.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# அருட்பத்து

## மகாமாயா சுத்தி

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

**உரை.**—ஒளிவடிவானவனே ! (ஞாயிறு, திங்கள்) என்ற இரு சுடரானவனே ! (அவற்றை) சூழ்ந்த (நட்சத்திரங்களாகிய) தன்னொளியுடைய விளக்குகளானவனே ! சுழல்களையுடைய கூந்தலையும் பருத்த நகிலையுமுடைய உமைமங்கையைத் திருமேனியிற் பாதியாகக் கொண்டவனே! மேலோனே! பாலின் நிறத்தைக்கொண்ட திருவெண்ணீற்றையணிந்தவனே ! தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனும், திருமாலுமறியாத நியாயவானே ! வளம் பொருந்திய திருப்பெருந்துறையில் மலர் நிறைந்த குருந்தமரத்தடியின் கீழ் வீற்றிருந்த சிறப்பையுடைய முதல்வனே ! அடியேன் விரும்பி உன்னை அழைத்தால் நீ அஞ்சாதே என்றுறுதியுரைத்தருள்க.

**குறிப்பு:**—ஞாயிற்றைச் சோதியென்றும், திங்களைச் சுடரென்றும், நெருப்பினை விளக்கென்று கூறுவாருமுளர். மடந்தை=மடமையுடைய பெண். மடமை=இளமை, அடக்கம், கொளுத்தக் கொண்டு, கொண்டது விடாமை. பாதி யென்றதனல் உமையம்மை



உடம்பினில் தான் பாதியாயிருப்பவனென்று பொருள் கொள்வாருளர். பால் என்பது பாலின் நிறத்திற்கு ஆகுபெயராய் நின்றது. சீர்,அடியார்க்கு ஞானமருளுஞ்சிறப்பு. அதெந்துவே என்றதிசைச் சொல்லை மலையாளச் சொல்லாகக் கொண்டு அதென்ன வென்று கேட்டருள்க எனப் பொருளுரைப்பது முண்டு. கன்னடத்தில் அஞ்சாதே என்ற பொருளுடையதென்ப. ௧

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

**உரை:**—கூத்தப் பெருமானே! குற்ற மற்றவனே!என்று முள்ளவனே! நெற்றிக் கண்ணையுடையவனே! வானோர் தலைவனே! ஒப்பற்றவனே! உன்னைக் காண்பதற்காகக் கூவி யழைத்து உலக முழுவதுந் தேடியுங் காணக்கூடவில்லை. திருந்திய முறையாலமைந்த தடாகத்தையுடைய திருப்பெருந்துறையின்கண் வளம்மிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்புடைய மெய்ப்பொருளானவனே ! அடியேன் விரும்பி யழைத்தால் அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

**குறிப்பு :**—உயிர் தானே முயன்று கடவுளைக் காண முடியாதென்பதும், தேடி முயன்ற காலை பக்குவம் பார்த்து இறைவன் தானே வந்து அருள் புரிவானென்பதும் இதனுட் கூறப்பட்டன. திருத்தமாம் என்பதைத் திருப்பெருந் துறை என்பதோடு சேர்த்து யான் திருத்தமடைவதற்கு ஏதுவாகிய என்றும் பொருள் கொள்ப. அருத்தம்=பொருள்......அருத்தன்=பொருளானவன். உ

எங்கள் நாயகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள்நா யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கண்நா யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

**உரை :**—எங்கள் தலைவனே! எனதுயிர் நாதனே! மயிர்ச் சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய உமை, கங்கை என விருவர் கணவனே! சிறந்த அழகுடைய மன்மதனுடைய உடலானது தீப்பற்றுமாறு நோக்கிய சிவந்த நெற்றிக் கண்ணையுடைய பெருமானே! திருப்பெருந்துறையின் கண் வளமிக்க மலர்களையுடைய குருந்த மாத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்புடைய அருட் கண்ணையுடையவனே! அடியேன் விரும்பியழைத்தால் அஞ்சாதே என்றருள் செய்வாயாக.

**குறிப்பு :**—உயிர்களுக்கெல்லாந் தலைவனாதலின், எங்கள் நாயகனென்றார். குழலிமாரிருவர் என்பதற்குக் கிரியா சக்தி, ஞான சக்தி என்பாருமுளர். நெற்றிக்கண் நெருப்புக் கண்ணாதலின் செங்கணாயகன் என்றார். அழகிற் சிறந்தவனாதலால் தக்க நற்காமன் என்றார்.

கமலநான் முகனுங் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

**உரை:**—தாமரையில் வீற்றிருக்கும் அயனும், கரிய மேகத்தின் நிறத்தினையுடைய திருமாலும் யாங்கள் காணமுடியாத பாசமில்லாதவனே! எங்களுக்கு வெளிப்படவேண்டுமென்று இரந்து வேண்ட, பெரிய அனற்பிழம்பிலிருந்து வெளி வந்தருளிய என் தந்தையே! ஒலி முழக்கமுடைய நான்கு வேதங்களும் பயில்கின்ற திருப்பெருந்துறையின் வளமிக்க மலர்களையுடைய குருந்த மாத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்புடைய மாசிலாதவனே! அடியேன் விரும்பி யழைத்தால் அஞ்சாதே என்றருள் செய்வாயாக.



**குறிப்பு :**—திமிலம்=பேரொலி. விமலன் = இயல்பாகவே பாசங்களில் நீங்கினவன். அமலன்=குற்றமற்றவன். நான் மறை= பல்வகை மந்திரங்கள் என்று பொருள் கொள்வாருமுளர். ௪

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

**உரை:**—உடுக்கையின் வடிவத்தை உடைய நுண்ணிய இடையை உடையவளாகிய சுழன்ற கூந்தலை உடைய மங்கையாகிய உமையம்மையின் இரு நகிலின் நுனிகள் அழுந்திய தழும்புகள் சாம்பல் சூழ்ந்த பெரிய அனலின் நடுவில் இரண்டு புள்ளிகள் போல விளங்கும் ஒளி தங்கிய மார்பினனே! புதர்களைக்கொண்ட பெரிய சோலைகள் சூழ்ந்த திருப்பெருந் துறையில் வளமிக்க மலர்களையுடைய குருந்த மாத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்புடைய கடவுளே! அடியேன் விரும்பி யழைத்தால் அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

**குறிப்பு:**—காஞ்சீபுரத்தில் உமை இறைவனைப் பூசித்த காலை வெள்ளம் வந்துவிட, தனது முலைக் கண்கள் இறைவனது மார்பினிலே பதியும்படி தழுவிய கதை ஈண்டுக் குறிக்கப் பெற்றது. சுவடு=தழும்பு ; இறைவனது திருமேனி வான்றழலிற்கும், அவர்

மேலணிந்த சாம்பல் வெண்ணீற்றுக்கும், புள்ளி, சுவடிற்கும் உவமையாயின. செடி=புதர். அடிகள்=கடவுள், சுவாமிகள். ரு

துப்பனே தூயாய் தூயவெண் நீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்(து)
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை யளிக்கும் ஆரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

**உரை :**—பவளம் போல்பவனே! பரிசுத்தமானவனே! சுத்தமான திருவெண்ணீறு படிந்து மின்னு மொளியானது வயிரத்தின் மின்னு மொளி போன்ற விளக்கமுடையவனே! உன்னை நினைக்கின்றவர்களுள்ளத்தில் மிகுந்த சுவை தருகின்ற கிடைத்தற்கரிய அமுதமானவனே! செவ்விய பெரிய மந்திரங்கள் நிறைந்த திருப்பெருந்துறையின் கண்ணே வளமிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருக்கும் தந்தையே! அடியேன் உன்னை விரும்பியழைத்தால் அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

**குறிப்பு:**—பவள மேனியின் இடையிடையே படிந்து தோற்றும் திருவெண்ணீற்றடையாளங்கள் அசைகின்ற ஒளி போன்றமையால் துளங்கொளி என்றார். துதைந்து=நெருங்கி, படிந்து. செப்பம்=செம்மை. சு

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.



**உரை:**—நிலைத்த பொருளானவனே! அன்பர் பொருட்டு வெவ்வேறு வடிவங் கொள்பவனே! மேரு மலையை வில்லாகக் கொண்டு பகைவர்கள் ஊர்கள் மூன்றையும் எரித்தழித்த திருக்கையையுடையவனே! திருப்பாதத்தினால் எமனைக் கோபித்துதைத்த கடுமையாகிய அனல்தூண் போன்ற திருமேனியுடைய செம்மையனே! வளம் பொருந்திய திருப்பெருந்துறையிலே வளமிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருக்குஞ் சிறப்புடைய தலைவனே! அடியேன் உன்னை விரும்பிக் கூப்பிட்டால் அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

**குறிப்பு :**—விகிர்தா என்றதற்குப் பொய்யனே எனப் பொருள் கொள்வாருமுளர். மெய்யற்கு மெய்யனாகவும், பொய்யற்குப் பொய்யனாயு மிருத்தலால் அவ்வாறு கூறுவர். வில்லா வென்பதைக் கையனே என்பதனோடு முடிக்க. வில்லையுடைய கையனே என்பது கருத்து. செய்யனே=செம்மையனே=நேர்மையனே. பிழம்பு=திரட்சி. எ

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

**உரை:**—இயல்பாகவே பாசங்களில் நீங்கினவனே! ஆதியானவனே! முக்கண்ணுடையவனே! தவவேடங் கொண்டவனே! அரும்பு நிலைமாறாத பூவினைப் பறித்துத் திருவடிகளிலே தூவி வணங்கி அன்பாகத் தியானித்துத் துதிக்கின்றவர்களுக்கு மேலான நெறியினை நல்கியருளும் ஞானவடிவனே! வளம்பொருந்திய திருப்பெருந்துறையில் வளமிக்க மலர்களை உடைய குருந்தமரத்தடியில் விரும்பி வீற்றிருக்குஞ் சிறப்புடைய அப்பனே! அடியேன் உன்னை விரும்பி அழைத்தால் அஞ்சாதே என்றருள் செய்வாயாக.

**குறிப்பு:**—ஞாயிறு, திங்கள், அக்கினி மூன்றையும் இறைவனுக்கு முக்கண்ணாகக் கூறுவர். முனிவா என்பதற்குத் துறவுவேடம் உடையவனே என்று முரைப்பர். இறைஞ்சுதல், நினைதல், பரவுதல் மூன்றுங் கூறினமையால் திரிகரணங்களாலும் வழிபடுவது குறிக்கப்பட்டது. சித்தன் என்பதற்குச் சித்தர் வடிவமுடையவனென்று முரைப்பர். சித்து=அறிவு, நுட்பமான அற்புதத் திருவிளையாட்டு. அ

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

**உரை:**—மருட்சியுடைய என துள்ளத்தை மயக்கந் தீரும்படியாகத் திருவருட் கண்ணாற் பார்த்து, இம்மை மறுமை என்னு மிரண்டின் சார்பான பிறவியொழித்த மெய்ப்பொருளானவனே! (குற்றமற்ற) தூயதன்மையை உடையவனே! சீறுகின்ற ஒளியுடையபாம்புங் கங்கையுந் தங்கிய சிவந்த சடையையுடையவனே! உயிர்கள் தெளிவடைவதற் கேதுவாகிய நான்மறைகளும் பொருந்திய திருப்பெருந் துறையின்கண் வளமிக்க மலர்களையுடைய குருந்த மாத்தடியில் விரும்பி வீற்றிருந்தருளிய சிறப்புடைய கருணையாளனே! அடியேன் உன்னை விரும்பிக் கூப்பிட்டால் அஞ்சாதே என்றருள் செய்வாயாக.

**குறிப்பு :**—மருள்=திரிபுணர்ச்சி, மயக்கு=அறியாமை, பிறவியறுத்தமையால் மறுமையும் இம்மையும் ஒழிந்தன. பொருள்=மெய். பொங்கு=சீறுகின்ற. வாள்=ஒளி. ௯

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்
டென்னுடை எம்பிரான் என்றென்



றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே.

**உரை :**—திருத்தமாகிய பெரிய சோலை சூழ்ந்த திருப்பெருந் துறையிலே வளமிக்க மலர்களையுடைய குருந்தமாத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்பு இருந்த முறையை நினைந்து அது காணப்பெறாமையால் துக்கித்து என்னை அடிமையாகவுடைய எமது தலைவன் என்று கருதி அவ்வாறழைத்து அரிய தவவுருவ முடையவனே என எண்ணி விரும்பி யழைத்தால், பிறவியாகிய அலை மிகுந்த கடலின் கண் நின்று என்னை யடைவதற்கு நீ வா, கயிலைக்குச் செல்லும் வழி இதுதான் பார், அவ்வழியே போகுக, என்று அருள்செய்ய வேண்டும்.

**குறிப்பு :**—திருந்து=தாம் திருந்துதற் கேதுவாகிய என்றும் பொருளுரைப்ப. ஏசறா=ஏசற்று=துக்கித்து. இனைந்திட்டு எனவும் பாடமுண்டு. இனைந்திட்டு=வருந்தி. எம்பிரான், அருந்தவா, என்றென்று நினைந்தே என முடிக்க. அலைகடல் என்பது துன்பமுள்ள பிறவிக்கு உருவகமாக நின்றது. ஆனந்தக் கடலுக்கு அதனை உருவகமாகக் கூறுவாரு முளர். ஆனந்தக்கடல் அலைகடல் ஆகுமா என்பது ஐயம். கயிலை=வீட்டிற் கறிகுறி. போதராய்=போவாய், அல்லது வருவாய். ௧௦

திருச்சிற்றம்பலம்

திருக்கழுக்குன்றத்தில் அருளிய

# திருக்கழுக்குன்றப் பதிகம்

## குரு தரிசனம்

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

*திருச்சிற்றம்பலம்*

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு மான்உன் நாமங்
கள் பேசுவார்க், கிணக்கி லாததோர் இன்ப மேவருந் துன்ப
மேதுடைத் தெம்பிரான், உணக்கி லாதோர் வித்து மேல்
விளையாமல் என்வினை ஒத்தபின், கணக்கி லாத்திருக்கோலம்
நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.

**உரை :**—யாவரிடத்திலும் மாறுபாடில்லாத, திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பெருமானே! உன்னுடைய திருப்பெயர்களை எடுத்தியம்புவார்களுக்கு நிகரற்ற சிறந்த பேரின்பமே உண்டாகும். எமது தலைவனாகிய நீ, துயரங்களை யொழித்து, காய்ந்துபோதல் இல்லாத தனித்தன்மையுடைய பிறவி விதையானது மேலே விளையாதபடி, இருவினையொப்பு எனக்கு வந்தபிறகு, அளவிலடங்காத உனது திருவடிவத்தைத்திருக்கழுக்குன்றத்தே எழுந்தருளிவந்து காண்பித்தனை.

**குறிப்பு :**—பிணக்கு = சண்டை ; மாறுபாடு. இணக்கு இணங்கு என்பதன் விகாரம். ஒப்பு. உணக்குதல் = காய்தல்; வற்றுதல். ஓர் = தனியியல்புடைய. இருவினையொப்பு என்பது = இருவினைப் பயன்களிலும் ஒரு தன்மையான வெறுப்பு. கணக்கிலா = அகண்டமான. ௧

பிட்டு நேர்பட மண்சு மந்த பெருந்து றைப்பெரும்
பித்தனே, சட்டம் நேர்பட வந்தி லாத சழக்கனேன் உனைச்
சார்ந்திலேன், சிட்டனேசிவ லோக னேசிறு நாயி னுங்கடை
யாயவெங், கட்டனேனையும் ஆட்கொள் வான்வந்து காட்டி
னாய்கழுக் குன்றிலே.



**உரை :**—(மதுரைப் பிட்டு வாணிச்சியின்) பிட்டினை ஏற்றுக்கொள்ள, மண்சுமந்த திருவிளையாட லியற்றிய திருப்பெருந்துறையிற்றங்கிய (அன்பர்பால்) பேரருட் பித்துடையவனே! உனது கட்டளைத் திட்டத்திற்கு ஒத்துவராத குற்றமுடைய யான் உன்னை யானே அடையமாட்டேன். சிறந்த ஒழுக்கநெறி யானவனே! சிவலோக நாதனே! இழிந்த நாயினுங் கீழ்ப்பட்ட, கொடிய துன்பமுடைய என்னையும் அடிமைகொண் டருளும்பொருட்டு, திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளி உன் திருக்கோலங் காண்பித்தருளினை.

**குறிப்பு :**— நேர்பட = இசைந்து கொள்ள, ஒத்துமைப்பட. சழக்கு = குற்றம். சிட்டம் = ஆசார முடையவன்; கட்டம் = கஷ்டம். சட்ட என்பதற்கு முற்றிலும் எனப் பொருள் கொள்ளுவதுமுண்டு. ௨

மலங்கி னேன்கண்ணில் நீரை மாற்றி மலங்கெ டுத்த
பெருந்துறை, விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி மேல்
விளைவ தறிந்திலேன், இலங்கு கின்றநின் சேவடிகள் இரண்
டும் வைப்பிட மின்றியே, கலங்கி னேன்கலங் காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

**உரை :**—(பிறவித் துயரால்) கலங்கின என்னுடைய கண்ணீரைத் துடைத்துப் பாசமறுத்த பெருந்துறைப் பெருமானை விட்டு நீங்கினேன், நான் தீவினையாகிய கெடுதியை யுடையேன், இனிமேல் நிகழக்கூடிய பயனை அறியாதேன். (என்மனம் பரிசுத்த மின்மையால்), அறிவில் விளங்குகின்ற உன் செய்ய பொற்பாதங்களிரண்டினையும் வைத்து வழிபடும் இடமில்லாமல் மருண்டேன். அங்ஙனம் நான் மயங்காவண்ணம், திருக்கழுக் குன்றத்திலே நின் திருவருட் கோலத்தைக் காட்டியருளினை.

**குறிப்பு :**—மலங்குதல் = அசைதல்-கலங்கல். பெருந்துறை, ஆகுபெயர். பெருந்துறையென்பதற்கு, மலங்கெடுத்த இடமாகிய பெருந்துறையை யெனவும், மலங் கெடுத்தற் கேதுவாய பெரிய நெறியை யெனவுங் கூறுப. விலகினேன் என்பதன் விரித்தல் விகாரம், விலங்கினேன் என்பது. ௩

பூணொணாததொ ரன்பு பூண்டு பொருந்திநாள் தொறும்
போற்றவும், நாணொ ணாததொர் நாணம் எய்தி நடுக்கடலுள்
அழுந்திநான், பேணொ ணாதபெ ருந்துறைப்பெருந் தோணி
பற்றி யுகைத்தலுங், காணொ ணாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

**உரை :**—(உனதன்பர்) பிறரால் மேற்கொள்ளப்படாத உயர்ந்த பேரன்பு பூண்டு உன்னை யடைந்து தினமும் வழிபடவும், அது செய்ய இயலாமையால், அன்பர் வெட்கப்படக் கூடாததொரு வெட்க மடைந்து, பிறவியாகிய கடல் நடுவுள் ஆழ்ந்துபோக இருந்த யான், அடியேன் பற்றிப் போற்றுதற்கரிய, திருப்பெருந்துறையிற் பரமாசாரியனது திருவடிகளாகிய பெரிய தெப்பத்தை எய்தி அதனைச் செலுத்துதலும், எளியேன் காணுதற்கரிய அகண்டமாய நின் திருவடிவத்தைத் திருக்கழுக்குன்றத்திலே எனக்கு உணர்த்தி யருளினை.

**குறிப்பு :**— முதலிரண்டடியும், திருப்பெருந்துறையில் அருள் பெறுதற்கு முன்னுள்ள அடிகள் நிலையைக் குறிப்பன, பெருநெறியாகிய பெருந்தோணி யென்பாருமுளர். தோணி, திருவடிக்கே உவமையாதல் மரபு.

௬

கோல மேனிவ ராக மேகுண மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும் அறிந்தி லாதஎன் சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமேகரி யாக நானுனை நச்சி நச்சிட வந்திடுங்
கால மேஉனை ஓதநீ வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே,

**உரை :**— (பன்றிக் குட்டிக்கு முலைகொடுப்பான் தோன்றிய) அழகிய திருமேனியுடையபன்றியுருவனே! திருப்பெருந்துறைக்கண் வீற்றிருந்த, நற்பண்பாகிய அருண் மேகமே! நல்லொழுக்கம் யாதும் அறியாத எனது உள்ளத்தில் வைக்கப்பட்ட தலைமணிபோல்வானே! நான் உன்னை மிகவும் விரும்பிய அளவில், உலகமே சான்றாகும்படி, அருள் செய்ய விரைவில் எழுந்தருளி வந்திட்டவனாகிய காலத்தை வடிவாக வுடையவனே! உன்னை நான் துதிக்கும்படி திருக்கழுக் குன்றத்திலே உன் திருக்கோலத்தைக காட்டி யருளினை.



**குறிப்பு:**—கோலம்=அழகு. பன்றிக்குட்டிகட்கு முலைகொடுத்த செய்தி, திருவிளையாடற் புராணத்திற் காண்க. கொண்டல்=மேகம். கரி=சாட்சி. திருப்பெருந்துறையில் எழுந்தருளி அடிகட்குபதேசித்தமை, உலக மறிய நேர்ந்ததாகலின், ஞாலமே கரியாக என்றார். நச்சி நச்சிட=மிகவும் விரும்பிட. காலதத்துவம் - இறைவன் தொழிற்குத் துணையாதலின் அவன் வடிவமாகக் கூறுதல் மரபு. பக்குவ காலத்தையும், இறைவனையும் ஒன்றாகவே கருதினமை காண்க.

பேதம்இல்லதொர் கற்பளித்தபெருந்துறைப்பெருவெள்ளமே
ஏத மேபல பேச நீஎனை ஏதி லார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லால்உனை ஓத நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.

**உரை :**—உன்னிடமிருந்து வேறுபாடடைதற் கேது வில்லாத ஒப்பற்ற கற்பு நிலையை எனக்குக் கொடுத்தருளிய திருப்பெருந் துறையிற் றங்கிய இன்பப் பெருங் கடலானவனே! நான் உன்னைப் பற்றிக் குறைகளே கூறும்படி, அயலார் முன்னிலையில் என்னை விடுத்து, நீ யாதுசெய்தாய்? அறிவற்றதாய்த் தீங்கற்றதாய் ஒப்பற்றதாயுள்ள உன் திருவடியே புகலென்று நான் அன்பினாலே உன்னைத் துதிக்கும்படி, திருக்கழுக்குன்றிலே நீ உனது திருக்கோலங் காண்பித்தனை.

**குறிப்பு:**—கற்பு=கற்புடைப் பெண்டிர். பிறகணவரை நாடாமை போலப் பிற தெய்வத்தை நாடா நிலை. கற்பு=கல்வி எனவுமுரைப்பர். பேதமில்லதோர் கற்பு=அத்துவித ஞானம். இறைவன் உபதேசஞ் செய்தவுடன், தம்முடன் அடிகளை அழைத்துச் செல்லாமையின், ஏதிலார் முனம் என்செய்தாய் என்றார். சாதல் சாதல்=சாதலில்லாமை=அழிவின்மை. பொல்லாமை, பாசச்சார்பாய குற்றம். உனையோத என்பதற்கு, உன்னை நான் ஓதவும், அங்ஙனம் ஓதியபின் எனவு முரைப்பர்.

௮

இயக்கி மாரறு பத்து நால்வரை எண்குணம் செய்த
ஈசனே, மயக்க மாயதோர் மும்ம லப்பழ வல்வி னைக்குள்
அழுந்தவுந், துயக்க றுத்தெனை ஆண்டு கொண்டுநின் தூய்

மலர்க்கழல் தந்தெனைக், கயக்க வைத்தடி யார்மு னேவந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

**உரை :—** (உத்தரகோசமங்கையில் ஞானோபதேசஞ் செய்து), இயக்கப் பெண்களாகிய அறுபத்து நால்வரை இறைவனது எட்டுத் திருக்குணங்களின் வயமாக்கிய ஆண்டவனே! அறியாமைக் கேதுவாகிய இருள், வினை, மருள் என்னு மும்மலங்களினு லுளதாய பண்டைக் கொடிய வினைப் பயன்களில் அடியேன் ஆழ்ந்து கிடப்பவும், அதனாலாய எனது தளர்ச்சியை யொழித்து என்னை ஆட்கொண்டருளி, உனது பரிசுத்தமான பூங்கழல்களைக் கொடுத்தருளி (உன் உடன்அழைத்துச் செல்லாது) அங்ஙனஞ் சென்ற அடியவர்கள் முன்பாக என்னைத்துயருறுவித்து, இப்போது திருக்கழுக் குன்றத் திலே எழுந்தருளி வந்து, உனது திருவருட்கோலத்தைக் காட்டியருளினை.

**குறிப்பு :—**இயக்கர்=பதினெட்டுத் தேவகணங்களுள் ஒருவகையார். இயக்கியர் காதை, உத்தரகோச மங்கைப் புராணத்துட் காண்க. எண் குணம்=முற்றறிவு, இயற்கை யறிவு, தம் வய முடைமை, இயல்பாகக் கட்டின்மை, வரம்பிலாற்றல், வரம்பிலின்பம், தூய வுடம்புடைமை, பேரருளுடைமை என்பன. எண்குணத்துளோமே என்ற அப்பர் திருவாக்குங் காண்க. மும்மலத்துட் சேர்ந்த வினை மூலவினை. வல்வினை யென்றது, இருவினைப்பயன்களை. துயக்கு= தளர்ச்சி. கயக்க=கசக்க, துன்புற, இதற்குச் சிறக்க வென்று பொருள் கொள்வாருமுளர். எ

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# கண்ட பத்து

## நிருத்த தரிசனம்

### கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே.

**உரை :—**ஐம்பொறிகளின் வசப்பட்டு அறியாமையுற்று, இறந்தொழிவதற்கே எதுவாகி, இறந்தபின் வானிலே அலைந்து போய்க் கடத்தற்கரிய நரகத்தில் வீழும் இயல்புடைய எனக்கு, மனத்தைப் புனிதமாக்கிச் சிவமயமாகச் செய்து என்னை ஆட்கொண்டருளிய முடிவில்லாத பேரின்பமானவனை அழகு கொண்ட தில்லைச் சபையிற் காணலாயினேன்.

**குறிப்பு:—**இந்திரியம்=பொறி. மயங்கி=மயக்க முற்று என்றுமுரைப்பர். திரிபுணர்ச்சி யெய்தி என்பது பொருள். இறந்தவுடன் வான் வழிச் சென்று பிற இடங்களுக்குப் போதல், நூல்களுட் கூறப்படும். சிந்தை, அறிவைக் குறிக்கும். சிவத்தின் வசப்படுதலே சிவமாதல் என அறிக. ஆனந்தம் இறைவனுக்கு ஆகு பெயர். க

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே.

**உரை :—**வினைப்பயன் காரணமாக வருகின்ற பிறவியாகிய துன்பத்திலகப்பட்டு, இறைவனை தன்னைச் சற்றும் எண்ணாது சோர்

வடைந்து கிடக்கின்ற என்னை, எவ்வளவோ பெரிய வகையில் ஆண்டருளி ஏற்றுக்கொண்டு என் பிறப்பினைத் தொலைத்த ஒப்பற்றவனை, உலக முழுதும் வழிபடுகின்ற தில்லைத் திருச்சபையிற் காணலாயினேன்.

**குறிப்பு:**—தனை யென்பதற்கு உயிராகிய தன்னை யென்று பொருள் கொள்ளுவாருமுளர். ஐம்புலனிற்பட்ட காலை, உயிர் தன்னையுந் தலைவனையுமுணராமை காண்க. எனை = எத்துணை. ௨

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே.

**உரை:**—(இறைவனாகிய) தன்னுடைய வடிவத்தை யான் அறியாத காலத்திலேயே என் அறிவிற் புகுந்து உள்ளத்தில் நிலைபெற்று என் எண்ணத்தைத் திருத்தி உடம்பு கொண்டு எழுந்தருளி வந்து, திருவருளினால் என்னை ஆட்கொண்டருளியவனாகிய, திருத்துருத்தி யென்னுந் திருப்பதியில் வீற்றிருந்தவனது, இன்பம்பயக்கும் மங்களமான திருவடியை ஆசையோடு, நாயினைய அடியேன் அழகு கொண்ட தில்லைத் திருச்சபையிற் காணலுற்றேன்.

**குறிப்பு:**—தான் இறைவனை அறிதற்குமுன், அவன் தன்னைப் பக்குவப்படுத்தினமை கூறினார். ஊன்புக்கு என்பதற்குத் தனதுடலையிடமாக்கொண்டு என்றுமுரைப்பர். திருத்துருத்தி சோழநாட்டிலுள்ளது. பதம் = பாதம், சிவம் = மங்களமான. அருத்தி = ஆசை; அன்பு. ௩

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாளனாய்வந்து வனப்பெய்தி இருக்கும் வண்ணம்
பல்லோருங் காணஎன்தன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சு தில்லை அம்பலத்தே கண்டேனே.

**உரை:**—அருட்கலைஞானம் பெறாத சிற்றறிவுடையனாய்க் கீழ்ப்பட்ட நாயினையயான், அறிவுத் திறமுடையவனாய்ப் போந்து அருளழகடைந் தினிதிருக்கும்படி, (அடியார்) பலருங்காண எனது பாசத்



முள்ள அளவும் வியாத்தமாய் நின்று பரிணமித்து இந்த பரிணாமத்தைப் பிரயோசனங் காரணமாக அங்குரித்த நாள்முதல் ஆசரித்துக் கொண்டிருந்த ஆன்மாக்களுக்குப் பரிணாம முதிர்ந்த அந்தக் காலங்களிலே வித்தானது வெகு விதமாகப் பலித்து அவர்கள் தாகங்களை க்ஷமிப்பித்துச் சந்துஷ்டி பிறப்பிக்க இன்பத்தையே கொடா நிற்கும்; அதுபோல, வித்தான சிவமும் ஆன்மாக்களுக்குக் கன்ம வொப்பும் மலபாகமும் உண்டான அவசரத்திலே காருண்ணியமே திருமேனியாக எழுந்தருளி வந்து பக்குவப்பட்ட ஆன்மாக்களைத் தம்முடைய அளவிலே சிநேகிக்கும்படி திருவுள்ளத் தடைத்து இவர்களிடத்திலே அநாதியே எழுந்தருளி நின்ற உண்மையைப் பிரகாசிப்பித்து இந்த உண்மையான ஞான சுசுரூபத்திலே ஆன்மாக்களைக் கூட்டி நிறுத்தி இந்த நிலையின் முதிர்ச்சியாலே தன்னுடைய பேரின்பத்திலே இவர்கள் அநுபவித்துச் சம்பூரணத்தை அடையும்படி வெகு பலமாகக் கொடா நிற்கும்,—வித்தும் அதன் அங்குரமும் மெய் உணரில் - இந்த வித்தாகிய சிவனுண்மையும் அங்குரமாகிய ஞானத்தினுண்மையும் உணர்வார் உணருமிடத்து,—வித்து அதனில் காணாமையால் அதனைக் கைவிடுவர் - நெல்லு முதலியவற்றின் அங்குரங்களை இந்த வித்தின் பரிணாமமென்றும் இந்தப் பரிணாமங்களிலே அந்த வித்துக் கலந்து நிற்குமென்றும் அங்குரத்தின் பரிணாமம் முதிர்ந்தபொழுதே அந்த வித்தே வெகு பலமாகப் பலிக்குமென்றும் இதனை ஆசரித்துக்கொண்டிருந்து பலிப்பிக்குங் காலங்களிலே பலங்கொள்ள அறியாமல் அங்குரம் பரிணமிக்கின்ற காலத்திலே வித்துத் தோன்றாதது கொண்டு இந்தப் பரிணாமத்தில் ஓர் வித்துங் கண்டிலோமென்று அந்தப் பரிணாமத்தையுங் கைவிட்டு அதனுடைய பிரயோசனமும் இழந்து போகின்ற புத்தரைப்போல, தரிசித்து ஞானத்திலே நின்று சாதித்து இந்த ஞானமேயாய் இந்த ஞானத்துக்கு முதலாகிய சிவனைக் கூடிப் பேரின்பத்தையே பெற மாட்டாமல், அந்த ஞானத்தைத் தரிசித்தவளவிலே இவ்வளவே பிரயோசனமென்று சிவரூபத்தின் உண்மையை அறியாமல் அந்த ஞானத்தையுங் கைவிட்டுப்போன பாக்கியஹீனர் சிவபோகத்தை இழந்துபோகா நிற்பர்கள்,—கண்டவர்கள் பேறாமையால் பேறு அற்றார் - அந்த நெல்லு முதலியவற்றின் அங்குரங்களிலே வித்துக் கலந்து நிற்குமென்று அறிந்தவர்களும் பயன்படுமளவும் அந்தப் பரி



182095

ஞமத்தைத் ஆசரித்துக் கொண்டிருந்து பிரயோசனப்படுங் காலங் களிலே பிரயோசனங் கொள்ளமாட்டாமல் பராமுகத்தாலே அதின் பிரயோசனத்தைப் பிறர்கொள்ளத் தாம் இழந்துபோகின்ற பாக்கிய ஹீனரைப்போல, சிவனைத் தாரகமாதலொழிந்து ஞானம் பிரகாசியா தென்று அறிந்தவர்களும் அந்த ஞானத்தைக் கைவிடாமல் நின்று விசுவத்தைக் கைவிட்டு அந்த ஞானமாகவே சாதித்து இந்த ஞானத் தின் ஐக்கியத்தாலே சிவனைப் பெற்றுப் பேரின்பமே அநுபவித்துத் திருப்தி யடையமாட்டாமல், வாதனையின் மிகுதியாலே பராமுக ராய்த் தாம் பெற்ற ஞானத்தினைப் பின்பு அநுபவிக்கலாமென்று நித் தத்துவம் பெற்றிருப்பாரைப்போல, நெகிழ்ந்திருந்தவர்கள் தமக்குப் பேறான சிவபோகத்தை இழந்துபோகா நிற்பார்கள். ஆதலால் நீயும் இந்தத் தவத்தைப் பெற்றோமென்று கர்வியாய்ப் போகாதை, இடை விடாமல் ஞானமாய் நின்றே சாதித்துப் பின்பு இந்த ஞானத்தில் உறுதலாலே ஞானமானதுந் தலைமறையப் பலிக்கத்தக்க சிவபோகத் திலே அழுந்தி அநுபவிப்பாயாக.

இதற்குப் பிரமாணம்—"வித்தினி லன்றி முளையில்லை யம் முளை - வித்தினி லன்றி வெளிப்படுமாறில்லை - வித்து முளையு முட னல்ல வேறல்ல - வத்தன்மைத் தாகு மறநெறி தானே" என்னும் திருமந்திர மாலையாற் காண்க. ௫௭

இந்தச் சிவரூபந் தன்னை எப்படி அறிவேனென்ற மாணாக்கனை நோக்கி அருளிச் செய்கின்றார் :

ஒன்றன்று இரண்டன்று உளதன்று இலதன்று
நன்றன்று தீதன்று நானன்று—நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன்று அடியன்று தான்.

**(உரை)** ஒன்று அன்று - எல்லாப் பொருள்களுங் கரைந்த விடத் திலே உதிப்பது ஒன்றாகையாலே, எல்லாப் பொருளுந் தானாய் ஒன்றா யிருப்பதும் அன்று—,இரண்டு அன்று - தன்னிடத்திலே சுட்டற விளக்கின்ற அர்த்தமாகையினாலே, இரண்டாயிருப்பதும் அன்று—,உளது அன்று - வாக்கு மனாதீதமா யிருப்பது ஒன்றாகை யாலே, பிரத்தியக்ஷமா யிருப்பதும் அன்று,—இலது அன்று - ஞான



வான்களுக்கு ஞானயோகத்தின் முதிர்ச்சியிலே பரமானந்தத்தை அளித்து நிற்கையாலே, இல்லாத பொருளும் அன்று,—நன்று அன்று தீது அன்று - ஆன்மபோதம் இறந்தாற் கூடும் பொருளாகை யாலே, ஆன்மாக்களால் நன்று தீதென்று சுட்டப்படுவதும் அன்று,— நான் அன்று - நானே பிரமமென்று அகங்கரிக்கின்ற பசுஞானமும் அன்று,—நின்ற நிலை அன்று - அநாதியே தொடங்கி இன்றளவும் நிலையான பாசஞானமும் அன்று,—நீ அன்று—பசுஞானத்தையும் பாசஞானத்தையுமுடைய ஆன்மாவும் அன்று, நின்னறிவும் அன்று- உனக்கறிவாய் நிற்கின்ற ஞானமும் அன்று,—தலை அன்று அடி அன்று தான் - ஆதியும் அன்று அந்தமும் அன்று இந்தச் சிவ சொரூபம். ௫௮

இப்படி நிச்சயார்த்தமா யிருப்பதொன்று கூடும்படி எப்படி யென்ற மாணாக்கனை நோக்கி அருளிச்செய்கின்றார் :

சேய்யாச் செயலைஅவன் செய்யாமை கண்டுதனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினால்—எய்யாதே
மாணவக அப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கும்
ஆணவமும் இத்தால் அறி.

**(உரை)** செய்யாச் செயலை அவன் செய்யாமை கண்டுதனைச் செய்யாச் செயலில் செலுத்தினால் - ஆன்மாவினிடத்திற் பக்குவத் திலே விளைந்த பரமானந்தத்தை ஆன்மா அறிந்து உண்டாக்கிக் கொண்டதும் அன்று. சிவன் விகாரியாய் நின்று கொடுத்ததும் அன்று. ஞானமானது கரைந்தவிடத்திலே பிரகாசிக்கின்றபடியை அறிந்து இந்தப் பரமானந்தம் பிரகாசிக்கின்றபொழுதே இதுவுந் தோன்றாமல் அதுவே சுகரூபமாய் நிற்கும்படி அந்த நினைவானது அவிழத் தானும் அந்த நிராலம்பமே யானால்,—மாணவக வாஞ்சைக் கொடி வளர்க்கும் ஆணவமும் அப்பொழுதே எய்யாதே இத்தால் அறி - மாணவகனே! ஜநநத்துக்குக் காரணமாகக் குறிக்கப்படா நின்ற ஆசையாகின்ற கொடிகளை வளர்க்கப்படாநின்ற மூலமலமாகிய ஆணவமலமும் அப்பொழுதே வேரற்றுவிடா நிற்கும். நீ ஒன்றுக்கும் அஞ்சாதை, இப்படி அறிவாயாக. ௫௯

இந்தப் பொருளைச் சாதிப்பா னொருவனுக்கு ஒரு செயலுங் கூடவொண்ணாத படியாலே, அவனுக்கு ஒரு நியமமும் வேண்டா மென்று அருளிச்செய்கின்றார் :

ஏதேனும் காலமுமாம் ஏதேனும் தேசமுமாம்
ஏதேனும் திக்கா சனமுமாம்—ஏதேனும்
செய்வா னொருவனுமாம் செய்யாச் செயலதனைச்
செய்யாமை செய்யும் பொழுது.

**(உரை)** ஆன்மபோதம் உள்ள அளவும் இதற்கு அரிதாகிய அந்த நிராலம்பமான உண்மை ஒருவன் தன்செயலன்றியே கூடுமிடத்து, எல்லாக் காலமுமாய், எல்லாத் தேசமுமாய், எல்லாத் திக்குகளுமாய், எல்லா ஆதனங்களுமாய், எல்லாத் தொழில்களினு நிற்பா னொருவனும்.
௬0

இனி இந்தச் சிவயோகத்தை எளிதாகச் செய்வதா யிருக்கும் போதே செய்யாதிருக்கின்ற படியும் இந்தச் சிவயோகத்தின் பெருமையும் அருளிச்செய்கின்றார் :

செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துசிலர்
எய்தற் கரியதனை எய்தினர்கள்—ஐயோநாம்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

**(உரை)** சிலர் செய்தற்கு அரிய செயல்பலவும் செய்து எய்தற்கு அரியதனை எய்தினர்கள் - சிலர் கர்த்தாவை நோக்கித் தங்கள் சரீரத்தையும் மனத்தையும் வருத்தி யாவராலுஞ் செய்தற்கரிய செயல்கள் பலவற்றையுஞ் செய்து பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றார்கள், —ஐயோ செய்யாமை செய்து செயல் அறுக்கலாயிருக்கச் செய்யாமை நாம் செய்தவாறு. ஐயோ மாணவகனே ! எல்லா விகற்பங்களும் ஒழிந்து நிர்விகாரமான சுபாவத்தைப் பொருந்திச் சுக துக்கங்களிலே மொத்துண்பதான ஜநந மரணங்களை வேரறுத்துவிடலா யிருக்க, இந்த நிர்விகாரமான உண்மையை நாஞ் செய்யாதிருப்பது என்னையோ ?

இப்படிப் பொதுப்படச் சொன்ன இந்த வுண்மையை இவன் நெகிழாமல் விரைந்து கூடுகைப் பொருட்டு உபாயமாகவே அருளிச் செய்ததெனக் கொள்க.
௬௧



இந்த உண்மைகளில் ஒன்றும் அறியாத விசுவத்தார் படுகின்ற கிலேசத்தைக் கண்டு மேல்நொந்து அருளிச்செய்கின்றார் :

இப்பொருள்கள் யாதேனும் ஏதெனினும் ஒன்றுசெய்தல்
எப்பொருளும் செய்யா தொழிந்திருத்தல்—மெய்ப்பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலாம்
உண்டிருப்ப தென்னோ வுரை.

**(உரை)** மாணவகனே ! எண்ணிறந்த ஆன்மாக்களில், பெறுதற்கரிய மக்களாக்கையைப் பெற்ற ஆன்மாக்கள் சிவனை நோக்கி, மெல்வினையென்று சொல்லப்பட்ட சரியையாதல் கிரியையாதல் வல்வினையாதல் ஆதாரயோகமாதல் இவற்றில் ஒன்றைச் செய்தல், ஒன்றையுஞ் செய்யாது நிராதார யோகத்தைச் செய்தல், இந்த வுண்மையான பொருள் நிற்கின்ற முறைமை அறிந்து, தானும் அந்தவுண்மையிலே முறைமையாகப் பார்த்துக் கூடியிருத்தல், இந்த முறைமைகளிலே ஒன்றைச் செய்து பெறுதற்கரிய பேறுகளைப் பெறாதே, தாந்தாம் விரும்பப்பட்ட தேகங்களும் அர்த்தங்களும் நிலையில்லாதபடிகண்டு போதுகின்ற ஆன்மாக்கள்எல்லாரும் தேகங்களைப் போற்றி நின்று இதாகிதங்களின் பலன்களைப் புசித்து, அஞ்ஞான மெய்ஞ் ஞானமாய்ப் போதுகின்ற இது என்னகாரணம்? இதனை நீ சொல்வாயாக.

ஞானத்துக்குப் பக்குவரல்லாத ஆன்மாக்களை நோக்கி நொந்து அருளிச்செய்த இதுவும், சர்வான்மாக்களுக்குங் கிட்டாத பொருள் உன்னுடைய பாக்கியத்தினாலே கிட்ட இதனைக் கைவிட்டு, வாதனையைக் கைவிடாமல் நின்று, இந்திரிய வேடர்க்கு அடிமையாய்ப் பேறிழந்து போகாதே, இந்த வுண்மையிலே இடைவிடாமல் நின்று சாதித்தற் பொருட்டு, அந்நியோபதேசமாக அருளிச் செய்ததெனக் கொள்க.
௬௨

இனிச் சீடனைப் பார்த்து ஒன்று அருளிச்செய்கின்றார் :

வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென்
நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென்—கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேல் தக்கனார் வேள்விசெய்த
மாத்திரமே யாங்கண்டாய் வந்து.

(உரை) வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடில் என் - முன்பு மருவிப்போந்த தொழில்களையும் புத்திர மித்திர களத்திராதிகளையுங் கைவிட்டுத் துறவறத்திலே போய் நின்றாலும் பிரயோசனம் என்,—நாட்டிலே நல்வினைகள் செய்திடில் என் - இல்லறத்திலே யிருந்து நன்றான யக்ஞாதி கன்மங்களைச் செய்தாலும் பிரயோசனம் என்,—கூட்டில் வாள் சாத்தியே நின்றிலையேல் - பொருந்தினதொரு நிலையிலே நின்றாயாயின் உனக்குப் பிராணனை சிவனைக்கூடி அவன் செயலாகவே கருதி உன்னுடைய செயலற நின்றிலையாகில்,—தக்கனார் வந்து வேள்வி செய்த மாத்திரமே ஆம் கண்டாய் - தக்ஷப்பிரஜாபதி தன்னுடைய அகங்காரத்தின் மிகுதியாலே கர்த்தாவை இகழ்ந்து தன்னாலே செய்யப்பட்டதாகவே நின்று யக்ஞத்தைச் செய்து ஒரு பிரயோசனமுங் கைகூடாமல் நீங்காத துன்பமே பெற்றாற் போல, நீயும் கர்த்தாவைக் கைவிட்டு உன்னுடைய செயலென்றே நின்று பெறுதற்கரியபேற்றை இழந்து போவை. ஆகையால், இப்படிச் செய்யாமல் அந்த வுண்மையிலே நிற்பாயாக. இது திருட்டாந்த பூர்வமாக அறிவித்தது. ௬௫

இன்னமும் இவன் செயலற நின்று சாதிக்கும் உபாயத்தை உறுதி பிறக்கும் வண்ணம் அருளிச் செய்கின்றார் :

> சிவன்முதலே அன்றி முதலில்லை என்றும்
> சிவனுடைய தென்னறிவ தென்றும்—சிவனவன(து)
> என்செயல தாகின்ற தென்றும் இவையிற்றைத்
> தன்செயலாக் கொள்ளாமை தான்.

(உரை) சிவன் முதலே அன்றி முதல் இல்லையென்றும் - நித்தனாய்ச் சுத்தனாய் எப்பொருட்குந் தாரகமாய்க் கிருத்திய காரணனுமாய்க் கைவல்லிய தியாகியுமாய் அசைவின்றியே நிற்கின்ற சிவனாகின்ற கர்த்தாவை யொழிய வேறு நானென ஒருமுதல் இல்லையென்றும்,—என் அறிவது சிவனுடைய தென்றும் - ஆன்மாக்கள் யானே அறிந்தேனென்கின்ற அறிவெல்லாம் அவனாலொழிந்து அறியப்படாதாகையால், நீயும் இதனை அவன் அறிவே யென்றும்,—என் செயலதாகின்றது சிவனவன தென்றும் - எக்காலமும் ஆன்மாக்கள் யான் செய்தேனென்று செய்யத்தக்க செயல்களெல்லாம் அந்தக் கர்த்தாவின் செயலாகையால், நீயும் இதனை அந்தக் கர்த்தாவின்



செயலே யென்றும்,—இவையிற்றைத் தன் செயலாக் கொள்ளாமை தான் இப்படி நினைப்பன சொல்வன செய்வனவான இவற்றை எப்பொழுதும் தன்னுடைய செயலாகக் கொள்ளாமல், சகலமுங் கர்த்தாவின் செயலேயென்று யாவர் தான் அறநின்றார்கள் அவர்கள் அந்தப் பொருள் தானாய் விடுவார்கள். ௬௬

இனி இந்த அர்த்தஞ் சைவ சித்தாந்தத்திலொழிந்து வேறொரு சமயங்களினும் இல்லையென்று அருளிச் செய்கின்றார் :

> இன்றுஇச் சமயத்தின் அல்லதுமற் றேழையுடன்
> ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார்—இன்றிங்கே
> அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவரார்
> எங்குமிலை கண்டாய் இது.

(உரை) இன்று இச்சமயத்தின் அல்லது ஒன்று சொலி ஏழையுடன் மன்றத்து நின்றவர் மற்று ஆர் - இப்பொழுது இந்தச் சைவ சித்தாந்தத்தி லொழிந்து இப்படிப்பட்ட பரமஞானத்தையும் அருளிச்செய்து ஞானசத்தியுடனே கர்த்தா திருவம்பலத்திலே எழுந்தருளி நின்று ஆனந்த நிருத்தஞ் செய்தருளித் தன்னுடைய மெய்யடியார்க்கு எடுத்தருளிய ஸ்ரீபாதமே இரக்ஷை யென்று காட்டிய கையுடனே மோனத்தாலே மொழிந்து திருக்கண் சாத்தியருளி எல்லாருங் காணவே நின்றார் வேறொரு சமயங்களில் உண்டோ?— இன்று இங்கே அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவர் ஆர் - இன்று இந்த உலகத்திலே இந்தச் சமயத்திலே ஞானமுதமாகிய திருமுலைப் பாலை அமுது செய்து இந்தப் பெருமையாலே நெடுநாள் அஸ்தியாகக் கிடந்தது முன்பு போலே பிராணன் பெற்றுப் பிள்ளையுமாய் உள்ள வயதும் உற்று எழுந்திருக்கும்படி திருவாய் மலர்ந்தருளி இதனைப் பாசமயிகள் தங்கள் அஞ்ஞானத்தாலே சித்துக் காட்டினாரென்னாமல் (சித்தர் சித்து காட்டுவது மீண்டும் அப்பொழுதே பொய்யாய்விடுமாகையால், இப்படி யன்றியே) இந்தப் பெண் நெடுங்காலமிருந்து சிவத்தை அடையும்படி நிறுத்தினவர் சம்பந்தப் பெருமானா ரொழிந்து வேறு மொரு சமயங்களில் உண்டோ,—இது எங்கும் இலை கண்டாய் - இந்த முறைமைகள் இந்தச் சமயத்தி லொழிந்து மாணவகனே ! வேறொரு சமயங்களினும் இல்லைகாண்.

இனி இந்தச் சைவ சித்தாந்தத்தி னுறுதிப்பாட்டிலே நின்ற சிவஞானிகள் பெருமையை அருளிச் செய்கின்றார் :

விரிந்தும் குவிந்தும் விழுங்குவர்கள் மீண்டும்
தெரிந்தும் தெரியாது நிற்பர்—தெரிந்தும்
தெரியாது நிற்கின்ற சேயிழைபால் என்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று.

**(உரை)** விரிந்தும் குவிந்தும் விழுங்குவர்கள் - இந்தச் சிவரூபம் தம்மிடத்தில் நிற்பதுபோல எவ்விடத்தும் நிற்கின்ற முறைமையைக் கண்டு பேரின்பத்தை எய்தியும் இதிலுறுதலாலே தம்மையும் பிரபஞ்சத்தையும் அந்தப் பொருளையும் மறந்து சுபாவத்திலே அழுந்தியும் அநுபவித்தல் செய்யா நிற்பர் அன்றி,—மீண்டும் தெரிந்தும் தெரியாது நிற்பர் - இந்த முறைமைகளிலே அநுபவியா நிற்கும்போதும் பிராரத்தத்தாலே பிரபஞ்சந்தோன்றினலுஞ் சொரூபத்தினைக்கியத்தாலே பிரபஞ்சநீதி அறியாமல் அந்த உண்மையைக் கண்டு நில்லா நிற்பர்கள் சிவஞானிகள்,—தெரிந்தும் தெரியாது நிற்கின்ற சேயிழைபால் என்றும் பிரியாது நின்றவனைப் பெற்று - அநாதியே சர்வத்தையும் அறிந்தும் அறிவித்தும் நடத்தா நிற்கும்போதுந் தான் ஒரு விகாரங்களினும் படாமல் நிற்கின்ற ஞானசத்தியுடனே எக்காலமும்விட்டு நீங்காத சிவனைத் தங்களிடத்தில் அறுதியாகப் பெற்று.

இது சிவஞானிகளுக்கு ஒடுக்கத்திலும் விரிவிலுந் திருவிலும் இந்த வுண்மையே யொழியப் பிரபஞ்சவாதனை கூடாதென்று அறிவித்தது. ௬௬

இன்னமும் ஒரு திருவெண்பாவாலே இதனை விளங்க அருளிச் செய்கின்றார் :

ஆதனமும் ஆதனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச்—சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராய்இருப்பர்
ஏதமறக் கண்டவர்கள் இன்று.

**(உரை)** ஆன்மாக்களுக்கு இருப்பிடமான தத்துவங்களையும்இவையிடமாக நிற்கின்ற ஆன்மாக்களையும் அநாதியே பொருந்தி அவை அவராய் அல்லவுமாய் நின்கின்ற சைதன்னிய சொரூபனான சிவனை



அவன் காருண்ணியத்தினாலே ஞானமே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளிவந்த ஆசாரியனைக் கொண்டே தெளிந்து, தாமும் அந்தச் சைதன்னிய சொரூபராய், நிற்கின்ற தம்மையும் அந்தச் சைதன்னியத்தோடு கரையும்படி அந்தச் சிவன் கையிலே கொடுத்து, ஞானத்துக்கு மேலாகிய அந்தச் சிவமாகியே இன்றும் இராநிற்பார்கள், திரோதாயி நீங்கத் தரிசித்த கலியாணர்கள். ௬௭

இப்படி நிற்கத்தக்க சிவஞானிகளிடத்தில் உண்டான விசேஷங்களை அருளிச் செய்கின்றார் :

தாமடங்க இந்தத் தலமடங்குந் தாபதர்கள்
தாமுணரில் இந்தத் தலமுணரும்—தாமுனியில்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து.

**(உரை)** தாம் அடங்க இந்தத் தலம் அடங்கும் தாபதர்கள் தாம் உணரில் இந்தத் தலம் உணரும் - இப்படி ஞானத்திலே நின்று சாதித்தவர்கள் அந்தச் சிவனைப் பெற்றுச் சிவனிடத்திலே ஒடுங்கவே, ஞானமும் ஒக்க ஒடுங்கா நிற்கும். இப்படிப்பட்ட சிவஞானிகள் பிராரத்தத்தாலே நிலை திரிந்தாலும் முன்பு ஒடுங்கின ஞானமும் ஒக்க உணர்ந்து முன்பு மாயை சீவித்தாற்போல இப்பொழுதும் இந்த ஞானமே இவனுக்குத் தனுகரண புவன போகங்களுமாய் நிற்கும்;—தாம் முனியின் பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போய் அகலும் நாமடந்தை நயந்து நில்லாள் - இப்படிப்பட்ட சிவஞானிகளுக்குக் கோபப் பிரியங்கள் இல்லையாயினும் மிக்க பாவிகளால் அவர்கள் திருவுளங் கருகின காலத்து அந்தப்பாவிகளுக்குண்டான ஐசுவரியமும்போய் அவர்கள் கீர்த்தியும் விட்டுப்போய் அவர்கள் வாக்குகளும் தம்பியா நிற்கும்

சிவனைக்கூடி நின்ற சிவஞானிகளுக்குப் பிராரத்தத்தாலே நிலை திரிந்தாலும் விசுவங் கூடாமல் ஞானங் கூடின காரணம் ஏதென்னில்? ஞானத்திலே நின்றவன் விழுந்தால் அதற்குக் கீழான பிரபஞ்சத்திலே விழா நிற்பன். ஞேயத்திலே அழுந்தினவனுக்கு நிலை திரிந்தால் அதற்குக் கீழான ஞானத்திலே விழுவன். இதனையொழிந்து விசுவங் கூடாதென அறிக. ௬௮

இப்படிச் சிவனைப் பெற்றவர்கள் முத்தராய் விடுவதொழிந்து ஒன்றை ஆக்குதல் அழிக்குதல் செய்யின், அவை ஈசுவரன் கிருத்தியமாயிருக்க, இவர்களுக்குண்டானபடி எப்படி என்ற மாணாக்கனை நோக்கி அருளிச் செய்கின்றார் :

துரியம் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான்—துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்.

**(உரை)** துரியங் கடந்த சுடர்த்தோகையுடன் என்றும் பிரியாதே நிற்கின்ற பெம்மான் - ஆன்மபோதத்தால் அறிதற்கரிய ஞான சத்தியுடனே எக்காலமும் விட்டு நீங்காமல் நிற்கின்ற பரமேசுரனானவன்,—துரியத்தைச் சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும் அவன் அன்பர்க்கு ஆக்கியிடும் - தன்னுடைய அளவிலே மிக்க அன்பை வைத்த ஆன்மாக்களை ஆன்மபோதங் கூடாமல் விழிப்பித்த ஞான சத்தியிலே கூட்டித் தன்னாலே செய்யப்பட்ட அநுக்கிரகங்களையும் அவர்களைக் கொண்டு தான் கூடிநின்று செய்வித்து அவர்கள் செய்தார்களாம்படியே நிறுத்தா நிற்பன். ௬௯

இப்படிப்பட்ட சிவஞானிகள் அருளாலே செய்த சாமர்த்தியங்களை நான்கு திருவெண்பாக்களாலே அருளிச் செய்கின்றார்:

ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல்—ஏடெதிர்வெப்(பு)
என்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

**(உரை)** ஓடஞ் செலுத்தித் திருக்கொள்ளம்பூதூர் சேர்ந்ததும், திருப்பட்டீச்சுரத்திலே முத்துச் சிவிகை பெற்றதும் திருவாவடுதுறையிலே உலவாக்கிழி பெற்றதும், திருமறைக் காட்டிலே திருக்கதவு அடைக்கப் பாடியதும், திருவோத்தூரிலே ஆண்பனை பெண்பனையாகப் பாடியதும், திருக்கோலக்காவிலே பொற்றாளம் பெற்றதும், பாலையை நெய்தலாகப் பாடியதும், வைகை நதியிலே திருவேடு எதிரேறப் பாடியதும், கூன் பாண்டியர் சுரநோய் தீர்த்ததும், திருமயிலையிலே என்பைப் பெண்ணாக்கியதும் ஆகிய இவ்வற்புதச் செயல்கள் உயர்ந்த புகழையுடைய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சிவபிரான் திருவருளாலே செய்தவைகளாம். ௭௦



கோல்கரியின் நீற்றறையின் நஞ்சிற் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல்—நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல்திறப் பித்தல்
திருவாமூ ராளி செயல்.

**(உரை)** யானையினின்றும், நீற்றறையினின்றும், விஷத்தினின்றும், கொலையைப் போக்கியதும், கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலை நீந்திக் கரையேறியதும், திருமறைக் காட்டிலே திருக்கதவு திறக்கப் பாடியதும் ஆகிய அற்புதச் செயல்கள் திருவாமூர் திருநாவுக்கரசு நாயனார் சிவபிரான் திருவருளாற் செய்தவைகளாம். ௭௧

மோகம் அறுத்திடின்நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத்—தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை
ஏதாகச் சொல்வேன் யான்.

**(உரை)** மோகத்தை ஒழித்தால் வீடுபேற்றை யாம் அருளுவது முறையென்று, வேதாகமங்களிலே விதித்தருளிய மேம்பட்ட சிவபிரானையே, பரவையார் சங்கிலியார் இருவர் மாட்டும் தூதாகச் செலுத்துந் திருவருளை அப்பெருமான் மாட்டுப்பெற்ற வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனாரது தொண்டுகளை யான் எத்துணைப் பெருமையுடையதென்று அளவிட்டுரைப்பேன். ௭௨

பாய்பரியொன்(று) அந்தப் பரமானந் தப்பரனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து—மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

**(உரை)** குதிரைமேல் எழுந்தருளிய சிவபிரானைப் புகழ்ந்து திருவாசகம் பாடி, யாங்கள் (அத்திருவாசகத்தை ஓதுதலால்) கருப்பத்தின் வருத்தம் அறியா வண்ணம் செய்தருளினார் திருவாதவூரார். ௭௩

இப்படிப்பட்ட சிவயோகமே முத்தியைத் தருவதென்றும் நின்ற யோகங்களெல்லாம் ஜநநத்தை விளைக்குமென்றும் அருளிச் செய்கின்றார் :

அம்மையிலும் இம்மையிலும் அச்சந் தவிர்த்தடியார்
எம்மையுமாய் எங்கும் இயங்குதலான்—மெய்ம்மைச்
சிவயோக மேயோகம் அல்லாத யோகம்
அவயோக மென்றே அறி.

**(உரை)** தம்பிரானார் திருவடியைப்பெற்ற சிவயோகிகள், பதமுத்திகளாலுண்டான பயங்களையும், பிராரத்தத்தாலே இந்த உலகத்திலுண்டானபயங்களையுஞ் சொரூபத்தின் ஐக்கியத்தாலே கெடுத்து அந்தச் சொரூபத்துக்குள்ளளவும் வியாத்தராய் ஒரு சங்கற்ப விகற்பங்களுமின்றியே, எவ்விடத்துந் தங்கள் சுவேச்சையிலே திரிகையால், மாணவகனே! இப்படிச் சற்காரியமான சிவயோகமே, சிவனை உள்ளபடியறிந்து கூடின யோகமாம். மற்றுமுள்ள யோகங்களெல்லாம் சிவனை உள்ளபடியறியாத யோகங்களாகையால், அவையெல்லாம் ஜநநத்தை யுண்டாக்குமென்றே அறிவாயாக. எச

ஆன்மாக்களெல்லார்க்குங் கர்த்தா ஒருவனாயிருக்க, சிலரைப் பதமுத்திகளிலே வைத்துஞ் சிலரைத் திருவடியிலே சேர்த்துக் கொண்டுஞ், சிலரை விசுவத்திலே நிறுத்தியுஞ் செய்தால், பக்ஷவாதி யாகானோ அவனுடைய கிருபைக்குப் போதுமோ வென்ற மாணாக்கனை நோக்கி அருளிச்செய்கின்றார் :

மன்னன் அருள் எவ்வண்ணம் மானுடர்பால் மாணவக
அன்ன வகைய தானருளும்—என்னில்
அடியவரே எல்லாரும் ஆங்கவர்தாம் ஒப்பில்
அடியவரே எல்லாம் அறி.

**(உரை)** மாணவகனே! இராஜாவானவன் தன்னுடைய ஆஞ்ஞைவழி நடக்கும் இராச்சியங்களில், பிராணிகளெல்லாரையும் இரக்ஷிக்க வேண்டுமென்கின்ற கருத்து எப்பொழுதும் உண்டாயிருந்தும், புத்திமான்களாய்ச் சாந்தராய்த் தன்னளவிலே மிகுந்த சிநேகராயிருக்கத் தக்கவர்களைத் தானாகப் பார்த்தும், தன்னளவிலே சிநேகமின்றிக் காரியத்தைப் பெற்று ஆஞ்ஞைக்குப் பயந்திருக்கத் தக்கவர்களை ஒவ்வொரு முகங்களிலே வைத்தும், குணஹீனராயிருக்கத்தக்கவர்களை அவர்களுக்குத் தக்க தண்டங்களிலே வைத்துத் தண்டித்துக் குணவான்களாக்கியுஞ் செய்கின்ற இவை யெல்லாங் கிருபையே யானாற்போல, பரமேசுவாருடைய திருவுள்ளம் எல்லாரா



விலும் ஒத்தவாறாயிருப்பினும், மலபாக முண்டாமளவும் ஆன்மாக்களுக்குத் தனுகரண புவனபோகங்களையுங் கன்மபலங்களையுங் கூட்டிச் சுகதுக்க வாதனைகளிலே வைத்தும், சிலரைச் சத்திநிபாதக் குறைவுக் கீடாகப் பதமுத்திகளிலே வைத்தும், மிகுத்த சத்திநிபாதமுடையவர்களைத் திருவடியிலே சேர்த்தும் இங்ஙனம் முறையாக நிறுத்துவன். ஆனால், எல்லாரும் அவருக்கு அடிமையாயிருந்தாலும், திருவடியைப் பெற்ற அடியார் ஒப்பில்லாத அடியாராகையால், நீயும் இவையெல்லாவற்றையும் அறிந்து, திருவடியிலே பொருந்தியிருக்கின்ற சிவயோகமே ஜநநத்தை அறுக்கின்ற யோகமென்று இதிலே நிலைநின்று அநுபவிப்பாயாக. எரு

இப்படி ஒப்பில்லாத அடியார்க்குந் தேகமுள்ள வளவும் பிராரத்தம் புசிக்க வேண்டுகையால், பிராரத்தம் புசிக்கும்போதும் ஆகாமியமேறாமற் புசித்தபடி, எங்ஙனமென்ற மாணாக்கனை நோக்கி, அருளிச் செய்கின்றார் :

உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத் தாக்கில்—தொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
இளைப்பதுமொன் றில்லை இவர்.

**(உரை)** உடம்புடைய...ஆக்கில் - பிராரத்தநாசம் பிறக்குமளவும் உடம்பிருக்கத்தக்க சிவயோகிகள், தாம் சிற்றின்பத்தைப் பொருந்தினார்களாயினும், அந்தச் சிற்றின்பமானது நிலையில் வேறுபாடும், பாவனையில் வேறுபாடு மொழியப், பேரின்பத்திலே வேறுபாடில்லையாகையால், இவர்களுக்கு இந்த இரண்டு வேறுபாடுமின்றிச் சொரூபத்திலே நிலைதிரிந்தாலும், ஞானத்திலொழிந்து, மலமாயை கன்மங்களிற் படார்கள்; ஆதலாலே, கூடின சிற்றின்பங்களெல்லாம் ஞானத்தினிலையாலே மீண்டும் அந்தப் பேரின்பத்திலே ஆக்கிக்கொள்ளா நிற்பார்கள். இப்படிச் செய்கையில் இவர்களுக்கு,—தொடங்கி...இவர்- பிராரத்தம் புசிக்கும்போதும் மறுமைக்கு வித்தான ஆகாமியம் அங்குரிப்பது சிறிதுமில்லை. பிராரத்தநாசம் பிறந்து தேகமானது நழுவுங் காலத்து இவ்வுடம்புடன்கூடி மரிப்பதுமில்லை; ஆகையால், இவர்கள் ஒரு கன்மங்களாலும் ஒரு சற்றுஞ் சலியார்கள். எசு

ஞானத்தாலே சொரூபத்தைக் கூடவேண்டுமாகில், அந்த ஞானந்தானே அமையாதோ, சொரூபமென்னும் ஒரு பொருளைக் கூடவேண்டுமோ என்ற மாணுக்கனை நோக்கி அருளிச்செய்கின்றுர் :

பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துள்ளானை உள்ளபடி—பேரின்பம்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த இன்னமுதம்
உண்டவரே உண்டார் சுவை.

**(உரை)** பேரின்பமான...கண்டார்-அளவிடப்படாத பரமானந்தமான பிரமசத்தியுடனே இடைவிடாத சுக ரூபனுயிருக்கின்ற பரமேசுவரனை முறைமையிலே கூடி அந்தப் பரமாநந்தமே அநுபவிக்கின்ற சிவ யோகிகளே சிவனை உள்ளபடி அறிவார்கள்,—கடல் ...சுவை-கடலிற் பிறந்த இனிய அமுதத்தைப் புசித்து அதில் உண்டான இரசத்தில் அழுந்தினவர்களே, அமுதத்தைப் புசித்தவர்களும் அதிற் பிரயோசனமான நித்தியத்துவம் பெற்றவர்களுமல்லது, அந்த அமுதத்தைத் தரிசித்த மாத்திரத்தில் அதனுடைய இரசமுந் தெரியாது ; பேறுங்கூடாது. அதுபோல, மலமாயை கன்மங்களை நீங்கி ஞானத்தைத் தரிசித்தாலுஞ், சிவனைக் கூடிப் பரமானந்தத்தை அநுபவித்தாலொழிந்து, ஞானம் அறிந்த மாத்திரத்தில் சாயுச்சியங் கூடாது. எஎ

இப்படிச் சுகரூபமாயிருக்கின்ற பரமேசுவரன் நானுவிதமாயிருக்கின்ற பிரபஞ்சத்துக்குக் கர்த்தாவாகில், அவனும் விகாரியாகானோவென்ற மாணுக்கனை நோக்கி அருளிச் செய்கின்றுர் :

நங்கையினுன் நாமனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினுற் செய்தளிக்கும் நாயகனும்—நங்கையினும்
நம்பியாய்த் தான்நடுவே நாட்டப் பெறுமிதுகாண்
எம்பெருமா ஞர்தம் இயல்பு.

**(உரை)** நம்முடைய நினைவின் வசத்திலே நின்று, கைகள் முதலான அங்கங்களெல்லாந் தொழில்களைச் செய்து முடியா நிற்க, அந்தச் செயற்பாடுகளெல்லாம் நம் மேலே ஏறுமாறுபோல, சுகரூபியாயிருக்கின்ற சிவன் சாக்ஷி மாத்திரமாயிருந்து தன்னுடைய சத்தியாலே பிரபஞ்சத்தை நடத்தி நிற்க, இந்தச் சத்தியினும் நிர்விகாரமாயிருக்கின்ற சிவன்தான் ஒன்றைச் செய்யாதிருக்கும்போதும், இந்தச் சத்திக்குப் பிராணனும் நாயகனுமாகையாலே, இந்தச் சிவனையே கர்த்தாவாகச் சொல்லப்படுதலான் மாணவகனே ! இவ்வளவே காண் எம்முடைய கர்த்தாவுக்குச் செயலாயுள்ளது. எஅ



இப்படி வெகுவிதமான சத்தியிலே, நிர்விகாரமான சிவன் பொருந்தி நின்றபடி எப்படியென்ற மாணுக்கனை நோக்கி, அருளிச் செய்கின்றுர் :

பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றுற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும்—செந்நிறத்தள்
எந்நிறத்த ளாயிருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்த ஞயிருப்பன் ஆங்கு.

**(உரை)** பொன்னினது நிறமான மாற்றுனது கட்டியான போதும் ஆபரணங்களான போதும் மாற்றுக்கு வேறுபாடில்லாமை போல, சுகரூபனுன சிவனும் ஞானசொரூபமான சத்தியும் இந்த முறைமையே யாதலால், பிரபஞ்ச நிமித்தமாகச் சத்தியானது யாதொரு ரூபமா யிருந்ததோ நம்முடைய கர்த்தாவாகிய சிவனும் அந்த விடங்கள் தோறும் அந்தந்த முறைமைகளாயே இரா நிற்பன்.

இன்னமுஞ் சிவனுடைய நிலைமையை விளங்க அருளிச் செய்கின்றுர் :

தாரத்தோ டொன்றுவர் தாரத்தோர் கூறுவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர்—தாரத்தின்
நாதாந்தத் தேயிருப்பர் நாற்றுனத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு.

**(உரை)** தாரத்தோடு ஒன்றுவர் - சிருட்டி காலத்திலே ஆன்மாக்கள் சூக்கும தேகத்துடனே இச்சாஞானக்கிரியைசீவிக்கைப் பொருட்டாகச் சிவனும் தம்முடைய சத்தியைத் தோற்றுவித்துத் தாமும் அந்தச் சத்தியுடனே கூடி இச்சாஞானக்கிரியா சொரூபமாவர்,—தாரத்து ஓர் கூறுவர் - அவர்களுக்குத் தூலதேகமாய் வகுப்புண்ண வேண்டித் தாமுஞ் சத்தியுமாக அர்த்தநாரீச்சுர விக்கிரகமாகா நிற்பர்,—தாரத்தோடு எங்கும் தலை நிற்பர்,—அந்த ஆன்மாக்களுக்கு மலபாக முண்டாகைப் பொருட்டு அவர்கள் கன்மங்களை அநுபவிக்கவும்

ஆர்ச்சிக்கவும் வேண்டி, சத்தியுருவமான பிரமா விஷ்ணு உருத்திரர் மகேசுவரர் சதாசிவர் என்று சொல்லப்பட்ட விக்கிரகங்களுடனே அந்தராமூர்த்தியான பிரணவ சொரூபமாய் ஆன்மாக்களிடங்களிலே மாயாதத்துவங்களுடனே கூடி நடத்தா நிற்பர்,—தாரத்தின் நாதாந்தத்தே இருப்பர் - மீண்டும் ஆன்மாக்களையுந் தத்துவங்களையும் பிரிக்கவேண்டி மகாமாயாசத்தியான நாதாந்த நிருவிகாரத்திலே இராநிற்பர்,—நாற்றானத்தே இருப்பர் - இவை ஒன்றையும் அறியாமல் உபாதானங்களிலே மறைபடவேண்டி நாலாந்தானமான திரோதான சத்தியிலே இராநிற்பர்,—வேதாந்தத்தே இருப்பர் - இவற்றுக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டி வேதத்திலே முடிந்த பொருளான பராசத்தியிலே இராநிற்பர்,—வேறு - இப்படி எல்லாமாய் நிற்கும்போதும் இவற்றுக்குத் தான் வேறுமாய்த் தன்னுடைய சுபாவமான சொரூபமாய் இராநிற்பர். அ0

இப்படிப் பரமேசுவரன் எல்லாமாய் அல்லவுமாய் நிற்கின்ற முறையைப் பேதமென்னவோ அபேத மென்னவோ பேதாபேத மென்னவோ வென்ற மாணக்கனை நோக்கி அருளிச் செய்கின்றார் :

ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்கள் ஒன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால்—இன்றுரைக்க
என்னால் இயன்றிடுமோ என்போல்வார் ஏதேனும்
சொன்னால்தான் ஏறுமோ சொல்.

(உரை) வெகு விதமாயுள்ள சாத்திரங்களெல்லாம் ஒரு சற்றுந் தரித்து நின்று அவனுடைய உண்மையை அறுதியிட்டுச் சொல்ல மாட்டா. இப்படிப்பட்ட தொன்றை இப்பொழுது அறுதியிட்டுச் சொல்ல என்னால்முடியுமோ? என்னை யொப்பார் சிலர் சொன்னாலும் விசுவத்திலுள்ளார்க்கு ஏறிடுமோ சொல்லாய்?

இன்னமும் இவனுக்கு இந்த முறைமை விளங்கிற்றில்லை யென்று நொந்து இப்படி அருளிச் செய்ததெனக் கொள்க. அக

இதனை இன்னமும் இவனறியும்படி அருளிச் செய்கின்றார் :-

யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாகன் இல[illegible]தலினால்

# சமாஜச்சார்பில்
# புராணப் பிரசங்கங்கள்

சைவத்திருவாளர் - நாகிசெட்டியார் அவர்கள் மாளிகையில் சனிக்கிழமைதோறும் இவை நடைபெற்று வருகின்றன. ஏப்ரல்மீ 7, 14, 21, 28-ம் தேதிகளில் முறையே திருவாளர்கள் - அ. கந்தசாமிப்பிள்ளை, பு. சமாபுரி முதலியார், க. சோமசுந்தரம் செட்டியார், ஆர். சண்முகசுந்தரம் செட்டியார் ஆகிய பேரறிஞர்கள் கோரக்கர்கதி, மெய்ப்பொருள் நாயனார் சரித்திரம், சண்டேசுவரர் சரிதை, தண்டியடிகள் புராணம் என்பனபற்றியும் மேமீ 5, 9-ம் தேதிகளில் திருவாளர்கள்-திரு. வி. உலகநாதமுதலியார், அ. வரதநஞ்சைய பிள்ளை ஆகிய பேரறிஞர்கள், சயந்தன் கனவுகாண் படலம், சாதகாங்க கதி என்பனபற்றியும் உயரிய தூயமுறையில் பிரசங்கித்தார்கள்

---

## சங்கப் புலவர் அகராதி

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு எனப்படும் சங்க நூல்களிற் காணப்படும் ஆசிரியர்கள் பெயர்களெல்லாம் அகர வரிசையில் தொகுக்கப்பட்ட இந்நூல், ஒவ்வொரு புலவரும் இயற்றிய பாடல்களும் இன்ன இன்ன என்ற குறிப்போடு பல பேரறிஞர்கள் உதவியைக் கொண்டு சமாஜப் பதிப்பாக வெளிவந்துள்ளது. தனிப்பிரதி விலை அணா 2½. தபாற்கூலி அணா 1. எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஒன்று. தபாற் கூலி வேறு. ஒவ்வொரு தமிழ் மாணவரிடமும் இவ்வகராதி இருத்தற் குரியது.

---

## சிவஞான சித்தியார் சுபக்கம்

மூலமும் சிவஞான சுவாமிகள் உரையும் - சமாஜத்தின் அடக்க விலைச் சுத்தப் பதிப்பு - தனிப் பிரதி விலை அணா 12. ரிஜிஸ்தர் தபாற் கூலி அணா 5. எட்டுப் பிரதிகள் விலை ரூபா. 5. தபாற் கூலி வேறு.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 7. No. 5.

உ
சிவமயம்

# பெரிய புராண வெளியீடு

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்புக்களாகப் பதினொரு திருமுறைகள் வெளிவந்து விட்டன. பன்னிரண்டாம் திருமுறையாகிய **பெரியபுராணம்**, அதை இயற்றிய தெய்வச் **சேக்கிழார்** பிறப்புத் தலமாகிய **குன்றத்தூரில்**, சேக்கிழார் திருநாளாகிய **வைகாசிப்பூசத்தில்**, பவ௵ வைகாசிமீ ௬௨ சனிக்கிழமையன்று (19-5-1934) சேக்கிழார் திருமுன்பு மாலை 6 மணிக்கு நமது சமாஜப் பதிப்பாக வெளியிடப்படும். பிறகு குன்றத்தூரிலும் அதையடுத்த திருநாகேச்சரத்திலும் பொதுக் கூட்டங்கள் நடைபெறும். சைவத்திருவாளர்கள் - ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கி. குப்புசாமி முதலியார் முதலிய பேரறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அன்பர்கள் அனைவரும் போதருமாறு வேண்டுகிறேம். புத்தகத்தின் விலை முதலிய விவரங்கள் கீழ் வருமாறு :—

**தனிப்பிரதி விலை ரூ. 1-6 ; ஆறு பிரதிகள் ரூ. 7-8.**

**தபாற்கூலி வேறு.**

குன்றத்தூருக்கும் சென்னைக்கும் நேரே மோட்டார் பஸ் ஓடுகிறது. பஸ் சார்ஜ் அணா 6. பலர் சேர்ந்து ஒரு தனி பஸ் மூலம் செல்வது நலம். அவ்வாறு செல்ல விரும்புவோர் மறை - திருநாவுக்கரசு, 2, வைத்தியநாத முதலி தெரு, சேத்துப்பட்டு, கீழ்ப்பாக்கம் தபால், சென்னை என்ற விலாசத்துக்கு உடனே எழுதுக.

இங்ஙனம் :

ம. பாலசுப்பிரமணியன்,

காரியதரிசி.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.